விலை 20/=

ISSN-261[illegible]8X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 ஆனி 2018 களரி: 06

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ்



புனிதஅந்தோனியார் திருவிழா

நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா




உங்கள் வாக்கைப் பதிந்து விட்டீர்களா?

## தெளிவற்ற சட்டங்கள் தெளிவான முடிவு





## பிரச்சனையின் வடிவம் மாறுது ஆனால் தீர்வு இல்லை



## முறித்துப் போடலாம் ஒட்டுவது கஸ்ரம் 11



தவராசா ரஜனி கண்ட கனவு

## "நீங்கள் என்னைத் தேடாமல் இருக்கிறியள் என்னெண்டு நான் உங்களைத் தேடுறது"





## அரசாங்கம் தாறதைத் தருகினமில்லை



என்ர பிள்ளையைப் பார்க்காமல் சாகமாட்டன்





## மாகாணத் தேர்தலுக்கு பலமுனைப் போட்டிகளா?

நீ உருவாகி பிறரை உருவாக்கு

# "நீங்கள் என்னைத் தேடாமல் இருக்கிறியள் என்னெண்டு நான் உங்களைத் தேடுறது"

## - தவராசா ரயனி கண்ட கனவு -



மயிலணி வடக்கு-சுன்னாகத்தைச் சேர்ந்த தவராசா தமயந்தி 1991. 07. 16 அன்று பிறந்தவர். 2009. 02.17 அன்று 17வது வயதில் புது மாத்தளன் பகுதியில் காணாமல் போன இவரின் பெற்றோர்களான தம்பிமுத்து தவராசா, தவராசா ரயனி ஆகியோர் காணாமல் போன தமது மகள் தமயந்தியை கண்ணீருடன் 10 வருடங்களாகத் தேடி வருகின்றனர். எனது கணவர் தவராசா இரண்டுவருடம் தடுப்பில இருந்து தான் வந்தவர். அதனால எமது மூத்த மகளான தமயந்தியை தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை. தடுப்பில இருக்கும் புனர் வாழ்வுப் பிள்ளைகளின் நிகழ்வு ஒன்று 2011ம் ஆண்டு சக்தி ரீ.வியில ஒளிபரப்பினார்கள். அதில எங்கட மகள் மாதிரியே ஒரு பெண்ணைக் கண்டோம். முகநூலிலையும் கனக்க பேரின் படங்கள் வந்திருந்தது. அதிலும் தேடிப் பார்த்தோம் கண்ணில் படவில்லை. ஐசிஆர்சி ல வேலை செய்பவர் என்று ஒருவன் கணவர் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கும் போது அறிமுகமாகினான். உங்கட மகளை கண்டுபிடிச்சுத் தர என்னால் முடியும். என்னை யாரிடமும் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று இரண்டு லட்சம் கேட்டான். சங்கிலியை அடகுவைச்சு எண்பத்தையாயிரம் கொடுத்தனாங்கள். எங்கட அடையாள அட்டைகளையும் வாங்கிக் கொண்டு போனவர் போனது தான் பிறகு தொலைபேசி இலக்கமும் வேலை செய்யவில்லை. எங்கள ஏமாற்றி அடையாள அட்டைகள், ஆவணங்களை வாங்கிக் கொண்டு வெளிநாட்டுப் பக்கம் போயிட்டான் போல...பிறகு பாருங்கோ சாத்திரம் கேட்டுப் பார்த்தன் மகள் மூளை

தவராசா ரயனி அவர்கள் (வயது 44) தமது மகளைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று தனது ஆதங்கங்களைப் பகிர்கின்றார்.



சுகமில்லாமல்இருக்கிறா என்று சொன்னார். ஒரு சாத்திரி மகள் உயிரோடை இருக்கிறா எண்டு சொன்னது மனசுக்கு ஆறுதலா இருந்திச்சு. கனவிலயும் பலமுறை காண்றனான். "நீங்கள் என்னைத் தேடாமல் இருக்கிறியள் நான் என்னெண்டு உங்களைத் தேடுறது" என்று கனவில் தமயந்தி கதைக்கக் கனவு கண்டனான்.

2009ல் ராமநாதன் முகாமில் இருந்தோம். அப்போது செட்டிக்குளம் வீரபுரம் பம்பமடு முகாமிலும் போய்த் தேடிப் பார்த்தோம். அங்கே நிறையப் பிள்ளைகள் இருந்தார்கள். ஆனால் எங்கள் மகளைக் காணவில்லை. வவுனியா பூந்தோட்டம் முகாமில தேடும்போது தான் தடுப்பில இருந்த எனது கணவரைக் கண்டு பிடிச்சன். எனக்குப் பாருங்கோ 5 பிள்ளைகள் காணாமல் போன தமயந்தி தான் மூத்தவள். நல்ல கெட்டிக்காரி. வைத்தியத்துறைக்குத் தான் படிச்சுக் கொண்டிருந்தவள். O/L பரீட்சையில 9A எடுத்தவள் எண்டாப் பாருங்கோவன். கடைசி மகளான அகல்யாவிற்கு காலில் செல் விழுந்து கஸ்ரப்பட்டார். மகன் ஒருவரும் தலையில் பீஸ் பட்டு சிகிச்சை பெற்றவர் என்றார்.




# "முடிவின்றித் தேடிக் கொண்டேயிருக்கிறேன்"




**- மங்களேஸ்வரி அம்மா -**

கணேஸ்வரம் அளவெட்டி வடக்கில் வசித்து வருகின்றார். 1975.06.29இல் பிறந்த நாகலிங்கம் குகநேசன் இடம்பெயர்ந்து 1992ஆம் ஆண்டு சங்கானையில் இருந்தனாங்கள். டீசல் மெக்கானிக் வேலையா கிளிநொச்சிக்குப் போனவர். வேலைய முடிச்சிட்டு கிளாலியால 5வது போட்டில வந்தவரைக் காணவில்லை. அந்த நேரத்தில இடம்பெற்ற செல்வீச்சில போய் பார்த்தனான். என்ரை மகன் குகநேசன்ர சடலம் இனம் காணப்பட வில்லை. அந்த நேரத்தில மகன் சரணடைந்திருக்க வேணும். இப்பவும் என்ர பிள்ளை உயிரோட தான் இருக்கிறார் எண்டதை என்ர உள்மனம் சொல்லுது. பிள்ளையை பறிகொடுத்துப் போட்டு அழுகையோட தான் வாழ்க்கை நகருது. குகநேசன் எங்க இருக்கிறாரோ? அவர் தான் என்ர ஆறுதல் முடிவின்றித் தேடிக் கொண்டேயிருக்கிறேன்

# "அரசாங்கம் கொடுப்பதை தருகினமில்லை" உதயகுமார் சசிகலாவின் ஆதங்கம்






ஏழாலை வடக்கு கண்ணகை அம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் சசிகலா (வயது 53) ஜே/205 கிராமசேவகர் பிரிவில் வசித்து வருகின்றார். இடம்பெயர்ந்து மீளத்திரும்பும் போது 25000 எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் பிறகு வாழ்வாதார உதவிகள் எதுவும் தரவில்லை. எமது வீட்டுக்குள் மழை பெய்தால் இருக்க முடியாது. வறட்சி நிவாரணம் வறட்சியானவர்களுக்கு கொடுப்பதில்லை. வசதியானவர்களுக்குத் தான் கொடுக்கின்றார்கள். இந்தியாவில வெளிநாட்டுக்குப் போக நிண்டவயளுக்கு வீடு கொடுக்கினம். மலசலகூடம் கட்டிக் கொடுக்கினம். கிணறு வெட்டிக் கொடுக்கினம். வாழ்வாதார உதவிகள் எண்டு ஆடு, மாடு, கோழி எல்லாம் கொடுக்கினம் போரால பாதிக்கப்பட்ட எங்களுக்கு எந்த உதவியும் இல்லை. தோட்ட வேலை செய்து 600ரூபா உழைச்சு நேர்மையா நடக்கிற எங்களுக்கு உதவியில்லை. அரசாங்கம் கொடுப்பதை தருகினமில்லை. காணாமல் போனவர்களின் குடும்பங்களிற்கு எந்த உதவியும் கொடுக்காமல் அலைக்கழிக்கினம்.

1987.10.17 அன்று பிறந்த என்ரை மகன் உதயகுமார் சசிக்குமார் தோட்ட வேலை, ஓவியம் வரைதல் என்று இருந்தவர் 2009.04.17ம் திகதி முள்ளி வாய்க்காலில் காணாமல் போனார். 2010.01.06 அன்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டனான். 2011.06.21 வவுனியா ஜோசப் முகாமில தேடிப் பார்த்தனான் பட்டியல்ல பெயர் இருந்தது. ஆனா வயசு கூடவாக இருந்தது.

கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு கடிதம் போட்டனான். இன்னும் பதில் வரவில்லை. தோட்டவேலை செய்வதிலும், சித்திரம் வரைவதிலும் ஈடுபாடா இருந்த என்ர மகன் பாருங்கோ விசுவமடுப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையாரின் ஓவியம் வரைந்தது இப்பவும் அழகுறக் காட்சியளிக்கின்றது. ஆனால் எனது பிள்ளையைத் தான் காண முடியவில்லை என்று மேலும் உதயகுமார் சசிகலா தெரிவித்தார்.

# "என்ர பிள்ளையைப் பாக்காமல் சாகமாட்டன்"

செல்வரத்தினம் சரஸ்வதி (வயது83) ஏழாலை வடக்கு - காளிகோவிலடியில் பனையோலைப் பெட்டிகள் விற்று இந்த வயதிலும் தன் சொந்தக்காலில் நிக்கிறா. அவவின் தீராத கவலையைப் பகிர்ந்து



கொள்கின்றார்.

என்ர கடைசி மகன் செல்வரத்தினம் அருந்தவராசா 1974.05.22 பிறந்தவர். சுருட்டுச் சுத்துற கூலி வேலை செய்து வந்தவர். 1996.07.16ஆம் திகதி கோண்டாவில் டிப்போ காவலரணில் பிடிக்கப் பட்டார். புலிகள் அமைப்பில் அவன் இருக்கவில்லை. ஆனால் குடிக்க காசு கேட்டவருக்குக் கொடுக்கவில்லை எண்டு ஆயுத பங்கருக்குப் பொறுப்பாக இருந்தவர் எண்டு தான் ஒருத்தன் பொய் சொல்லிக் காட்டிக் கொடுத்தவன்.

6வருசமா கொழும்பில வழக்கு நடந்திச்சு. நீதிபதி சொன்னார் அவர் இறந்து விட்டார் என்று. ஆனா மரணச் சான்றிதழ் தரவில்லை. அருந்தவராசா பிடிபட்ட கவலையில ஒரு வாரத்தில் எனது கணவர் செல்வரத்தினமும் இறந்து போனார். பெட்டி இழைக்க என்னால முடியாது. ஆரும் இழைச்சுத் தாறத கொண்டு திரிஞ்சு வித்துத் தான் வயித்தைக் கழுவுறன். அதோட பிச்சைச் சம்பளம் 1900ரூபா தருகினம். இது தவிர வேறு எந்த உதவியும் கிடைக்கவில்லை. பிரதேச செயலகங்களில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, காணாமல் போன உறவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. வீடு திருத்தக் கேட்டு அலைஞ்சு திரியிறம். அலைஞ்சது தான் மிச்சம் ஒண்டும் நடக்கேல்ல. என்ர அருந்தவராசா பற்றி நல்ல செய்தி வராதா என்று தான் ஒவ்வொரு காலையும் கண்விழிக்கிறன் என்ர பிள்ளையைப் பார்க்காமல் சாகமாட்டன்.

யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்: வேதநாயகம் சஞ்சீவதனுசன் |
வடிவமைப்பு: மு.சதீஸ்குமார் | ஜோய் கிசோன்
ஓவியம் டொமினிக் ஜீவா
ஆலோசகர் குழு
செ.யோசப்பாலா, எஸ் பெருமாள், எஸ்.யேசுதாஸ், எம்.எல்.லாபிர்
பதிப்பு: யாழ்களரி வெளியீட்டகம், முத்து பிறின்டேர்ஸ்
muthuprint@gmail.com
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை
jaffnarakaswaram@gmail.com


# போதைக்கும் வன்முறைக்கும் என்ன செய்யலாம்

வடக்கு கிழக்கு மக்களாகிய நாங்கள் வன்முறை வாழ்வு தராது என்றும், போதை வாழ்வை அழிக்கும் என்றும், அறிந்திருக்கின் றோம். அந்த அறிவார்ந்த நம்பிக்கையின் மீது எமது சமூக, சமய, கலாசார, பண்பாட்டு கட்டமைப் புக்களையும் எமது சந்ததியினரையும் எமது வாழ்வையும் மேம்படுத்த உறுதி பூணுகின்றோம்.

நாம் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள். எமது மனித வளங்களையும், பௌதீக வளங்களையும் பாரிய அளவில் இழந்து நிற்கின்றோம் எனினும் எமக்கான தீர்வை நோக்கி பயணிக்கும் மக்கள் என்ற வகையில் எம் இயலா மையின் அடிப்படையில் போதைகளும் வன்முறைகளும் செயற்கையாகவே எம்மீது திணிக்கப்படுகின்றன. இவை எமது மக்களின் விருப்பு மற்றும் தேவை சார்ந்த விடயங்கள் அல்ல. வன்முறையை, போதையை ஆதரிக்கும் எவரும் எமது மக்களின் மீதும் எமது எதிர்காலத்தின் மீதும் எந்த வித அக்கறையும் அற்றவர்கள் என்றும் எமது அழிவிற்கு துணை நிற்பவர்கள் என்றும் நாம் நம்புகின்றோம்.

அனைத்துப் பெற்றோரும் தாம் போதை மற்றும் வன்முறைகளில் இருந்து முற்றாக விலகியிருப்போடு தமது குழந்தைகள் இதுவிடத்தில் ஈடுபாடு காட்டவில்லை என்பதை முழுமையாக உறுதி செய்தல் அவசியமாகும். அனைத்து மதங்களும் போதைக்கும் வன்முறைக்கும் எதிரானவை மதத் தலைவர்களும், மதகுருமாரும், வணக்கஸ்தலங்களும் போதைக்கும் வன்முறைக்கும் எதிரான போதனைகள், வழிகாட்டல்கள், விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் முன்னரை விடவும் கூடுதல் முக்கியத்துவத்தோடு முன் னெடுத்தல் அவசியமாகும். போதைப் பொருள் பாவனை யிலும் வன்முறையிலும் பரவலாக ஈடுபடுபவர்கள் இளை ஞர்கள் என்ற வகையில் இளைஞருக்கான விழிப்புணர்வு நிகழ்வு மூலம் அவர்களை மீட்டெடுப்பதற்கான நிகழ்ச்சித் திட் டங்களில் சமூகமட்ட அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

அச்சு ஊடகம், இலத்திரனியல், இணைய ஊட கங்களும் சமூக வலைத்தளங்களும் மேற்படி விடயத்தில் கவனம் செலுத்த முன்வர வேண்டும். கிராம சேவகர் பிரிவுகள் பிரதேச செயலகங்கள் திட்டமிடலுடன் கூடிய தந்திரோபா யங்களை கருத்தாடல் செய்து களத்தில் பணியாற்ற விரைந்து செய ...வோமாக.

வீட்டுக்கு வீடு வாசல்படி என்று ஒவ்வொருவரும் மௌனித்திருப்போமானால் வீதிக்கு வீதி சந்திக்க சந்தி அவமானங்கள் தொடர்கதையாகிவிடும். எங்கள் சமூக ங்களை காப்பாற்ற முடியாத கையாலாகாதவர்களாக நாம் ஆகிவடுவோம் ஆகவே போதைக்கும் வன்முறைக்கும் உட்படாதவர்களாக சமூக முன்னேற்றத்திற்காக இளை யோரை திசைதிருப்ப குடும்பங்களில் இருந்து ஆரம் பிப்போம். குழுமங்களாகி இதை செயல்படுத்துவோம்.

# மாகாண தேர்தலுக்கு பலமுனை போட்டிகளா

வருது வருது விலகு விலகு என்ற நிலையில் பல தேர்தல் திருவிழாக்கள் வருகுது, இதில் பல விசித்திர சம்பவங்கள் நடக்கலாம். கியூவில் பலர் நிற்கிறார்கள் வேட்பாளராக களம் இறங்க எல்லோருக்கும் எதிர்பார்ப்பு மாகாண சபையில் முதலமைச்சராக விருப்பம் ஆனா இருப்பது ஒரு கதிரை தானே அதை எப்படி அடைவது என்பதுதான். இப்போ மரதன் ஓட்டத்திற்கு தாமே ஆயத்தமாகி விட்டார்கள்.

எந்தக் கட்சியில் இணைந்தால் வெற்றி கிட்டும் என பல முதளைகள் பல திட்டமிடுகிறது. தீர்மானம் எடுப்பவர் யார் அவரை திருப்திப்படுத்த வியூகம் எடுக்கும் எதிர்கட்சிகள், இதற்குள் இடைச் செருகலாக பூருவதற்கும் திட்டமிடுவோர் சிலர். இதில் சீற்கிடைக்காவிட்டால் அடுத்த அடுத்த கட்சியில் புகுந்து இருந்த கட்சியையே புட்டுவைக்கலாம் இருந்த அணியை என சிலர் பார்த்திருக்க இதுதான் நல்ல தருணம் என தேசிய கட்சிகள், நிவாரணம் உதவி என்ற போர்வையில் கைலஞ்சம் பல கொடுத்து உதவ வேட்பாளருக்கான பட்டு வேட்டியில் இருந்து போக்குவரத்து பதவிகள், ஏனைய அன்பளிப்புக்கள் தயாராகின்றது. தேசிய கட்சிகளுக்கு பெயர் கொடுத்தாலே ஒரு தொகை வைப்பிலிடப்படும். அதில் ஒரு பகுதி ஒழுங்குபடுத்துவோருக்கு கமிசனாக வந்துசேரும் இவை முன்பு உள்ளூராட்சியில் பெற்றவர்களே சொல்வார்கள். இதன் மத்தியில் வடமாகான சபை மக்களின், விருப்பு வெறுப்பு ஏதும் அறியாத தூரநோக்கு திட்டமில்லாத தமிழ் தலைமைகள் இறுதிநேர திருகுதாளங்கள் எப்பவும் நடப்பது போலவே வியூகம் அமைக்க காத்திருக்கின்றது.

மக்கள் எதிர்பார்ப்புக்கள், தரமான மக்களின் தேவைகள் மானம் மரியாதையுடன் எம் இன அபிலா சைகளை உணர்ந்து நிறைவேற்ற உள்ள கூட்டிச்செயல்படும் தலைவர்களை எதிர்பார்த்திருக்கின்றார்கள். றிமோட் கொன்றோலில் செயல்படும். தலைவர்களால் ஏற்படும் இன மொழிபண்பாட்டு சிதைவுகளில் இருந்து காக்க நல்ல தலைமைகளை எதிர் பார்க்கிறார்கள். இதுவரை எவரும் உருவாக்கப்படவும் இல்லை, உருவாக விடவும் இல்லை என்ற ஆதங்கமே மிஞ்சி நிற்கிறது.

களநிலை இப்படி தமிழரசுக்கட்சி திரு. மாவை சேனாதிராஜா, பாராளுமன்றத்தில் இருந்து சிலர் படி இறங்கி வருகிறார்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயற் திட்டங்களால் .தேவானந்தாவும், இன்நாள் முதலமைச்சர் நீதிஅரசர் விக்னேஸ்வரனும் இன்னும் எதிர்பார்ப்புடன் பலர் பின்வரிசையில் இறுதித் தருணத்தில் குதிக்க காத்திருக் கின்றார்கள். இவர்களில் பின்னால் அறிமுகமாகும் வேட்பா ளர்கள் யார்? அவர்களின் செயல்ப்பாடு மக்கள் செல்வாக்கு, எதிர்பார்ப்புக்கள் யார் பக்கமோ இறுதியில் சொல்லப்படும் வாக்குறுதிகள், பல செல்வாக்குகள் குத்துக்கரணங்கள் திசை திருப்பும் திருப்புமுனைகளாக மாறலாம் காலங்கள் தான் பதில் சொல்லும்.

மாகாணசபை, நாடாளுமன்றம், ஜனாதிபதி தேர்த ல்களம் சூடுபிடிக்கும் ஆண்டில் வாக்குறுதிகள், வார்த்தை யாலங்கள், கட்சித்தாவல்கள், வெளிநாட்டு செல்வாக்குகள் மக்களின் தீர்ப்புகளை மாற்றுமா? அரசியல் விழிப்புணர்வு மேம்பாட்டால் அன்றி அரசியலில் இருந்து ஒதுங்குவோரும், ஒதுக்கப்படுவோரும் தொடராகவே காணப்படும்.

# தெளிவற்ற சட்டங்கள் தெளிவான முடிவு!

- ரட்ணசிங்கம் கூல் -

சனநாயக நாட்டில் தெளிவான சட்டங்கள் இருக்கும் அவற்றை நடைமுறைக்கு கொண்டுவருகின்ற போது முடிவு தெளிவற்றதாக இருக்கும் அதே வேளை பொதுநலவாய நாடுகள் சொல்கின்றது. சனநாயகம் என்ற நாட்டில் தேர்தல் வழிமுறைகள் தெளிவற்றதாக முடிவு தெளிவாக இருக்கும். இவ்வாறு தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணசிங்கம்கூல்

யாழ் மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாகம் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வு 07.06.2018 அன்று வீரசிங்கம் மண்டபம் அருகில் பலூாண்களை பறக்கவிட்டு விழிப்புணர்வு ஊர்வலமாக மாவட்டச் செயலக மண்டபம் வரை பவனிவந்து சம்பிரதாய பூர்வமாக நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்ற போது ரட்ணசிங்கம் கூல் மேலும் தெரிவிக்கையில் ....

சட்டங்களை முறிக்காமல் சட்டங்களை மீறலாம் சந்திரிக்கா– மகிந்த ஆட்சிக் காலங்களில் கவுண்சிலுக்கு யாரையும் நியமிக்கவில்லை

ஒருவரை கொலை செய்தால் பொலிசார் வழக்குத் தொடர முடியும் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கின் றார்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் பொலிசாரும் ஏன் ஜனாதிபதி பின் நிற்கின்றார்கள்.

சிறிய குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவது போல பெரிய குற்றங்களுக்கு பொலிசார் நடவடிக்கை எடுக்க முடியும் ஆனால் அரசியல் வாதிகளுக்கு பயப்பிடுகின்றார்கள் 500 மில்லியன் ருபாய்க்கு பௌத்த விகாரைகள் கட்டுவோம் என்று ஜக்கிய தேசியக் கட்சி அறிக்கை விட்டது சட்ட மீறலாகும்

ஜனநாயகம் அடிப்படையில் பழைய காலத்து அரசர்களுக்குக் கீழ் இருந்தது போலதான் இயங்குகின்றது. தேர்தல் நடக்கும் போது சட்டத்தை இயற்றுவது அல்லது மாற்றுவது நாட்டுக்கு ஆபத்தாகும் தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஸ்ட பணியாளர் ஜனாப் எம்.எம். முகமட் உரையாற் றுகையில் 1913 இல் வடமாகணத்திலிருந்து சேர். பொன்னம்பலம் ராமநாதன் பேட்டியிட்டு இலங்கையில் முதலாவது பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார்

1956 இல் இலங்கை தேர்தல் திணைக்களம் உருவாக்கப்பட்டது வடமாகாணத்தைச் சேர்ந்த அருட் பிரகாசம் அவர்கள் தேர்தல் ஆணையாளராக முதலில் தெரிவு செய்யப்பட்டார் தற்போது வடமாகணத்திலிருந்து ரத்னஜீவன் கூல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக கடமை யாற்றுகிறார் அத்துடன் இறைமை என்பது ஒரு நாடு யாருக்கு சொந்தம் என்பதைக்குறிக்கிறது இறைமை மக்களுக்குரியது மக்களுக்கு உரியது இன்னொருவருக்கு கையளிக்க முடியா தது என்றார். மேற்படி நிகழ்வில் இந்தியத் துணைத்தூதர் கே.பாலச்சந்திரனும் கலந்து கொண்டார்.



# - ஈரங்கள் காய மறுக்கின்றன -



# இதயங்கள் வறண்டு போகலாமோ?













மலையகப் பிரதேசத்தில் அடிக்கடி மழை பெய் வதால் மண்சரிவுகள் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இயற்கையின் சீற்றம் மலை அடிவாரங் களில் குடியிருப்போரை காவு கொள்கிறது. ஆனாலும் அங்கேதான் இருக்கவேண்டிய நிலை வேறு எங்கேதான் போக முடியும். கொழுந்து பறித்து அட்டைக்கடி மத்தியிலும் நாம் குடிக்கும் தேனீருக்கு காரணமானவர்கள்! மலையக மக்கள் பழகுவதற்கு இனியவர்கள் வந்தாரை வரவேற் பதிலும் உபசரிப்பதிலும் அவர்களை விஞ்சிவிட முடியாது தமிழ் பேசும் உறவுகளை சந்திக்கின்றோம்!

ஹட்டன், அட்டன் பகுதிகளில் மலையக மக்களின் வாழ்க்கை முறைகள் அவர்களது கஸ்ட துன்பங்களை கேட் டறிந்து கொண்டிருக்கின்றோம். பாடசாலைக்கு ஒரு சிறுவன் சென்று கொண்டிருக்கின்றான். அவனது சப்பாத்து பிய்ந்து காணப்படுகிறது. பின்னால் கொழுவிய புத்த கப்பையும் பீத்தலாக காணப்படுகிறது. இப்படித்தான் அடிப் படை வசதிகளற்ற நிலையிலும் மலையக மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றார்கள்.

சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். தோய்த்த வெள்ளை உடுப்புக்கள் காயவில்லை வேறு உடுப்புக்கள் இல்லாததால் விளையாடிக்கொண்டிருக்கின்றோம் என்று ஒரு சிறுமி சொல்லிக்கொண்டே கயிறு அடித்து விளையாடுகின்றாள். இன்னொரு மாணவன் சைக்கிளில் ஏறி சாகசம் புரிகின் றான். மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டம் அல்பியன் தமிழ் வித்தியாலயம் மலை அடிவாரத்தில் பனிப்புகை முட்டங்களுக்குள் அழகாய் காட்சி தருகிறது. வாசல் பக்கம் செல்கின்றோம். வண்ணத்துப்பூச்சி வடிவில் சாதனை புரிந்த மாணவர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். பாடசா லைக்குள்ளே நாம் சென்று மணவர்களுடன் உரையாடி னோம். ஆசிரியர் வரவு தாமதமாகும் என்றார்கள் அவர்க ளுடன் சில ஆக்கத்திறன் செயற்பாடுகள் செய்துஅவர்களை மதிப்பீடு செய்தோம். வீரத்திலும் விவேகத்திலும் சிறந் தவர்களாக காணப்படுகின்றனர். பெற்றோர்கள் கொழுந்து பறிக்கச் சென்றதையும் அவர்கள் அதனை நிறுத்திக் கொடுப் பதையும் அவதானித்தோம். கமறாவுடன் நாம் வருவதைக் கண்ட அம்மம்மா ஒருத்தியும்

நான்கு சிறார்களும் எம்மையே பார்த்துக் கொண் டிருக்கிறார்கள் அவர்களின் பசியைப்போக்க மாடுகளுக்கு தீவனம் வெட்டிச்சுமந்து வருகின்றான் சகோதரன் ஒருவன் மாட்டில் பால் கறந்து காச்சிக் குடிக்கத்தான் காத்திருப்பதை அறிந்து கொண்டு அவர்களிடம் இருந்து விடைபெறு கின்றோம். அடுத்த மலை அடிவாரம் நோக்கி.....

## மலையகத்திற்கு யாழ்களரியின் சுற்றுலா

# பிரச்சனையின் வடிவம் மாறுது ஆனால் தீர்வு இல்லை

**- அருட்தந்தை எஸ் டேமியன்.-**

யாழ்ப்பாணத்தில் அருட்தந்தை எஸ் டேமியன். அ.ம.தி உளவளத் துணையினை அறிமுகப்படுத்தியதோடு 1988இல் "சாந்திகம்" உளவளத்துணை நிறுவனத்தையும் உருவாக்கியுமுள்ளார். கடந்த 31 வருடங்களாக மக்களுக்காக தொடர்ந்தும் உளவளத்துணையில் தொண்டாற்றிவரும் இவர் 1984இல் கனடாவில் உள்ள ஒட்டோவா பல்கலைக்கழகத்திலும் துய பவுல் பல்கலைக்கழகத்திலும் உளவளத்துணையில் மூன்றுவருட முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். இவர் மேற்படி பட்டப் படிப்பை முடித்து நாடு திரும்பியது முதல் இன்றுவரை இறைபணியையும் உளவளத் துணையினையும் கடமையாற்றி வருகிறார். அவருடன் மேற்கொண்ட நேர்காணல் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.

**1.நீங்கள் யாழ்ப்பாணத்தில் "சாந்திகம்" எனும் உளவளத்துணை நிறுவனத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?**

இனப்பிரச்சனை ஏற்பட்ட காலப்பகுதியிலேயே காணாமல் போதல்களும் ஆள் கடத்தல்களும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. வுஞனு என ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொல்லப்படும் நெருக்கீட்டுக்கு பிற்பட்ட மனவடு போன்ற சிக்கலான உளநல குறைபாடுகள் உடையோர் சமூகத்தில் அதிகரிக்கத் தொடங்கிவிட்ட நிலையில் உள்நாட்டு போரின் இறுக்கமான காலகட்டமான 1987ஆம் ஆண்டளவில், பாதிப்புக்கு உள்ளானவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் முதல்முதலாக மருத்துவபீட மாணவர்களுக்கு 21 நாட்கள் உளவளத்துணை பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்தேன்.

அதனைத் தொடர்ந்து 1988 ஆம் ஆண்டு அமெரிக்க மனநல மருத்துவர் அன்னா டோனி உடனும் மருத்துவர்கள் சிவராஜா, அனிட்டா, நச்சிநாக்கினியன், சிவசங்கர், அருட்சகோதரிகள் விக்டோரியா, ஜசிந்தா மேரி மற்றும் ஸ்ரீவ் – ஷெரோமி தம்பதிகள் ஆகியோருடன் இணைந்து "சாந்திகம்" எனும் உளவள ஆற்றுப்படுத்தும் நிறுவனத்தை தொடங்கினேன்.

**2. "சாந்திகம்" பயனாளர்களுக்கு எவ்வாறான சேவையை வழங்குகிறது?**

"சாந்திகம்" நிறுவனத்தின் மூலம் எமது சமூகத்தில் பல்வேறு நிலைகளிலும் வாழுகின்ற மக்களுக்கு ஏற்படுகின்ற மனநல பிரச்சனைகளுக்கு உளவளத்துணையும் மருத்துவ பரிந்துரைகளையும் மேற்கொள்வது போன்ற சேவைகளையும் உளவளத்துணை கற்கைநெறிகளையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம். தற்போது இந்நிறுவனத்தினால் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் [Office for National Unity & Reconciliation] எனும் செயற்றிட்டத்தினூடாக உள சமூக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

**3.உங்களின் உளவள ஆற்றுப்படுத்தல் சேவை பற்றி?**

இந்நிறுவனத்தில் பணிபுரிவதைத் தவிர, 1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய 1000 மேற்பட்ட மருத்துவபீட மாணவர்களுக்கு உளவளத் துணை கற்கைநெறியினை பயிற்றுவித்தேன். 1992ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல் துறையில் மருத்துவ உளவளத் துணையாளராகப் பணியாற்றினேன். 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்த நிலைமைகள் மிகவும் மோசமடைந்தது இந்நிலையில் ருஜேஊடுருகுக நிறுவனத்தின் வேண்டுதலின் பேரில் "சுகவாழ்வு" எனும் உளவளத்துணை நிறுவனத்தை தொடங்கி யுத்தப்பாதிப்புக்கு உள்ளாகி மனநலப்பிரச்சனைகளுக்கு உள்ளானவர்களுக்கான உளவளத்துணையினை மேற்கொண்டோம். அந்நிறுவனத்தில் 2006ஆம் ஆண்டுவரை இயக்குநராகச் சேவையாற்றினேன்.

பின்னர் பருத்தித்துறையில் தொடர்ந்து இறைபணியாற்ற வேண்டியிருந்ததால் 2006ஆம் ஆண்டளவில் "அஞ்சலியகம்" எனும் உளவளத்துணை நிறுவனத்தைத் தொடங்கினேன். அங்கு 10 வருடங்கள் உளவளத்துணை சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டேன். தற்போதும் வசந்தகத்தில் இயக்குநராக பணியாற்றுவதுடன் சாந்திகத்துடன் இணைந்து உளசமூக சேவைகளை முன்னெடுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தில் [Office for National Unity & Reconciliation] நிர்வாக சபை உறுப்பினராகவும் உளவளத் துணை மாணவர்களுக்கான மேற் பார்வை யாளராகவும் கடமையாற்றி வருகிறேன். சாந் திகத்திலும் ஆலோ சனைக்குழு உறுப்பினராக தொடர்ந்தும் கடமையாற்றுகிறேன்.

**4."அஞ்சலியகம்" உளசமூக மேம்பாட்டு நிலையத்தில் பணியாற்றிமை பற்றி..?**

யாழ்.தும்பளை, பருத்தித்துறையில் அமைந்துள்ள அஞ்சலிய கத்தில் கடந்த 10 வருடங்களாகப் பணியாற்றினேன் அங்கு பணிபுரியத் தொடங்கிய போது பாரிய சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்நிறுவனத்தில்

கணவனை இழந்து இழப்பின் துயரில் இருக்கும் காணாம லாக்கப்பட்டோரின் உறவுகள், பல்வேறு காரணங்களால் கணவனை பிரிந்து வறுமைக்கோட்டுக்குட்பட்டு வாழும் பெண்கள் மற்றும் விதவைகள் என 90 பெண்களை தேர்ந்தெடுத்து குழுச்சிகிச்சை முறைகளை கொடுத்தோம். அவர்களை 9 குழுவாக பிரித்து இயங்கச் செய்தோம். அவர்களது பிள்ளைகளை கவனமெடுத்து படிப்பில் ஊக்குவித்தோம்.

அத்துடன் அவர்களுக்கான மாலைநேரக் கல்வியைத் தொடங்கினோம். தனிப்பட்டரீதியில் குடும்ப தரிசிப்புகளை மேற்கொண்டு உளவளத் துணையாளர்கள் ஆற்றுப்படுத்தலை முன்னெடுத்தனர். இதற்கு பல நிறுவனங்களின் உதவிபுரிந்தன. குறிப்பாக MJF Charitable Foundation மற்றும் டில்மா இந்த சேவையின் தன்மையை உணர்ந்து வாழ்வாதார திட்டங்களை ஏற்படுத்தி இச்செயல்பாட்டுக்கு உதவி வருகின்றனர். மேலும் அந்தப் பகுதியில் வாழும் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளை ஒன்றிணைத்து விளையாட்டு மற்றும் கலைகளினூடாக [Art therapy & Play Therapy] ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டோம். அதனூடாக அச்சிறார்களை முன்னேற்ற முடிந்தது. அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள 35க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு 6 மாத கால உளவளத்துணை பயிற்சிவகுப்புகளை நடத்தினோம்.

**5.2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரான சமூகத்தை எப்படி பார்க்கிறீர்கள்?**

எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் இனப்பிரச்சனை தொடங்கியது முதல் தற்போதுவரையுள்ள சூழலில் மாற்றம் ஏதும் ஏற்பட்டதாக நான் கருதவில்லை. பிரச்சனைகளின் வடிவங்கள் மாறுகின்றனவே தவிர அவை முற்றாகத் தீர்க்கப்படவில்லை. ஒரு பூதம் விழுங்கி விட்டது போன்றதொரு நிலையே தற்போது காணப்படுகிறது. Collective Trauma என உளவியல் பதத்தில் குறிக்கப்படும் கூட்டு உளவடுவுக்கு ஆட்பட்டவர்களாக எமது சமூகத்தை காண்கிறேன். இது அர்ப்பணிப்பில்லாத வாழ்க்கையை ஏற்படுத்திவிட்டது.

மக்கள் குறிப்பாக இளையோர்கள் செயல்பாட்டினை, செயல்முனைப்பினை இழந்துள்ளார்கள். எதும் குறிக்கோளை அமைத்து அந்த பாதையில் செல்வதற்கான உத்வேகம் தற்போதைய இளையோர் மத்தியில் மிகக்



குறைவாகவே காணப்படு கிறது. மேலும் சமூகத்தில் எல்லா நிலைகளிலும் உள்ளவர்கள் மத்தியில் ஒரு சமூகப்பற்றின்மை, கொள்கைப்பற்றில்லாத அல்லது அலட்சியப் போக் கினைக் கொண்ட வாழ் க்கை முறையினைக் காண க்கூடியதாக உள்ளது. ஒரு காலத்தில் கட்டிக்காக்கப் பட்ட விழுமியங்கள் சிதை ந்து போய்விட்ட பின்பு யாரும் எதையும் செய்யலாம் கேட்பதற்கு ஒருவருமில்லை எனும் மனப்பாங்கு சமூகத்தில் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

**6.இந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வு என்ன?**

எம்மிடையே காணப்படுகின்ற பிரச்சனைகளை அல்லது சவால்களை முதலில் நமது சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும். பாரிய அளவில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் குழுக்களை அமைத்து கிராமம் கிராமமாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக உடல், உள, உணர்வு ரீதியான பாதிப்புகள் பற்றியும் தனிநபர், குடும்பம், சமூகம் என ஏற்பட்டுள்ள தாக்கங்கள் போன்றவற்றை உளக் கல்வி மூலம் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக இளைஞனுக்கும் வழங்கப்பட வேண்டும்.

தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உளவளத் துணையாளர்கள் உள்ளனர். பாதிப்புக்கு உள்ளானவர்கள் அல்லது அவர்களை இனங்கண்பவர்கள் உளவளத் துணையாளர்களை அணுகலாம். இதன் மூலம் அவர்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதுடன் வேண்டிய பரிந்துரைகளையும் செய்யலாம். தற்போது தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் தொடர்ந்து இவ்வுள சமூக வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

பிரச்சனைகள் அதிகம் காணப்படுகின்ற இடங்களில் கனிசமான அளவு பிரச்சனைக்கு உரியவர்களை இனங்கண்டு ஆற்றுப்படுத்தல் செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். சமூகப்பிரச்சனைகளை குறிப்பிட்ட துறைகள் அல்லது நிறுவ னங்கள் முற்றாகக் களைந்து விட முடியாது. எனவே அனைவரும் சமூகப்பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படுவது காலத் தின் கட்டாயம்.

**7.இளையோர்களுக்கு வழிகாட்டுவதில் உள்ள சவால்கள் என்ன?**


தற்போதைய சூழலில் க.பொ.த சாதாரண தர (O/L) மாணவர்களே யாருடைய அறிவுரைகளையும் கேட்பதற்கு தயாராக இல்லை. அனேக பெற்றோர்களுக்கு பிள்ளைகளில் கட்டுப்பாடு இல்லை. அவர்களில் மிகுந்த அக்கறை காணப்பட்டாலும் அதிகாரத்தால் அவர்களை இழந்து விடக்கூடும் என்ற அச்சம் அவர்களிடத்தே உள்ளது. எனவே அவர்களுக்கு பயப்படுகிறார்கள். இவ்வாறான நிலையில் பெற்றோர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்புகின்றனர். பிள்ளைகளுடன் இறுக்கமான உறவினை பேணிக் கொள்வதுடன் நற்புறவை ஏற்படுத்தி அவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு செயல்படுவது ஆரோக்கியமான சூழலுக்கு வழிவகுக்கும். வாழ்வின் பல்வேறு நிலைகளை எதிர்கொள்ளக் கூடிய அனுபவத்தையும் பார்வைகளையும் விஸ்தரிக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

**நேர்கண்டவர்:-**
**அல்பேட் பெஸ்ரியன்**

# கோடி அற்புதரின் கோலாகல விழா

புனித அந்தோனியார் திருவிழா இலங்கையில் பல பாகங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. இத் திருவிழாவில் சர்வமத மக்களும் ஒன்று கூடிப் பக்தியுடன் பங்கேற்பது நம் நாட்டில் சிறப்பான ஆன்மீக பக்தி முயற்சியாகக் காணப்படுகின்றது.

கொழும்பு கொச்சிக்கடை, பாசையூர், மானிப்பாய் எங்கும் பல்வேறு பாகங்களிலும் இருந்து ஆனி மாத திருவிழாவை அதிசிறப்புடன் கொண்டாடி வரும் திருத்தளங்கள் மின்விளக்குகளால் அழகு படுத்தப்பட்டு விருந்துபசாரங்கள், வழிபாட்டு சிறப்பு அருளாசியுரையைக் கேட்டு தமது தேவைகளை



இறைவனிடம் இரந்து கேட்டு பெற்றுத் தரும் புனித அந்தோனியாரின் புதுமைகளால் கோடி அற்புதர் என போற்றப்படும் சிறப்பைப் பெற்றவரின் புதுகைகளிற்கு பாலனைக் கையில் ஏந்தி பாரில் உள்ளோரின் கண்ணீரைத் துடைக்கும் புதுமைப் புனிதரின் வாழ்வின் இறுதி மூச்சு உள்ளவரை இறைவனின் அன்பை நினைத்து இறை யேசுவின் அருளால் புதுமை மகள் பெற்ற மகனின் மகிழ்வூட்டும் விழாவாக ஆனி 13 ம் திகதி அவரது இறைபாதம் அடைந்த நாளை நினைவூட்டி தொடரும் விழாக்களின் புதுமைகளின் அருளை அடைவோம்.

# ஈதுல் பித்ர் நோன்புப்

15.06.2018

## வாழ்த்துக்கள்



யாழ் மாநகரசபையின் எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் மூன்று மதங்களை சேர்ந்த மக்கள் ஒற்று மையுடன் வாழ்ந்து வருகிறார்கள் அந்த வகையில் முஸ்லிம் சகோ தரர்களிற்கு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.


**இ.ஆர்னோல்ட்**
முதல்வர்.யாழ் மாநகரசபை



இந்த நோன்புப் பெரு நாளில் நாங்கள் உறுதி எடுத்துக் கொள்வோம். ஒற்றுமையுடன் பலமான ஒரு சமூகமாக முன் னேற வேண்டும் என்று. இப்தார் எனும் சொல் நீண்ட பசிக்குப் பிறகு எடுக்கின்ற சாப்பாடு என்று சொல்லப்படுகின்றது ஒரு மனிதன் இறைவனுக்காக புசித்திருந்து சாப்பிடும் சந்தர்ப்பமானது ஏழையவர் களையும் நினைக்க வைக்கின்றது

ஏழைகளிற்கு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று நபிகள் சொல்லியிருக்கின்றார் யாழ்ப்பாண பிரதேசத்திலே மனிதர்கள் என்ற நிலையில் யாவரும் ஒன்றுபட வேண்டும் எல்லோருடைய உணர்வுகள், தேவைகள், பிரச்சனைகள் எல்லாமே ஒன்றுதான் தமிழ் முஸ்லிம் என்ற அடையாளம் தவிர ஒரே மொழி பேசுகின்ற சிறுபான்மை மக்கள் என்ற வகையில் ஒற்றுமை யிருக்கின்றது ஆகவேதான் சக வாழ்வே சக்தி தரும் என்பதாக இவ் விழாவை எதிர்கொள்கின்றோம்.

**ஜய்யூப் அஸ்மின்**
உறுப்பினர் வடமாகாண சபை



இஸ்லாமிய மக்கள் நோன்புப் பெரு நாள் கொண்டாடுவதை முன்னிட்டு யாழ் களரியில் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு சகோதரர் லாபீர் முயற்சித் துள்ளமை பாராட்டுக்குரியது. சகல மக்களும் புரிந்துனர்வுடன் வாழ்வதற்கு இத்தகய முயற்சி களை நன்றியுடன் பாராட்டுகிறேன்.

**ஜனாப் ஏ.ஜீ. நௌபர்**
தலைவர்.
இஸ்லாமிய வழிகாட்டல் அமைப்பு.
13ம் வாட்டாரத்திற்கான யாழ் மாநகரசபை
முதல்வரின்பிரத்தியேக இணைப்பாளர்.

அல்லாஹ்வின் கட்டளைப்படி றமழான் மாதம் முழுவதும் 30 நாட்களும் நோன்பிருந்து ஷவ்வால் பிறை தென்பட்டமறு நாள் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படும். அன்று அதிகாலை எழுந்து குளித்து புத்தாடை அணிந்து அத்தர் மணம் பூசி மைதானத்தில் நடைபெறும் நோன்புப் பெருநாள் தொழுகையிலும் ஜும்மா பிரசங்கத்திலும் கலந்து கொள்ளுவது அனைத்து முஸ்லிம்களின் கடமையாகும்.

தொழுகை முடிந்த பின்னர் ஒருவருக் கொருவர் முகமலர்வுடன் கட்டியணைத்து முஸாபஹா செய்வது வழமையாகும். நோன்புப் பெருநாள் தினத்தில் உற்றார், உறவினர்களை சந்தித்து தமது மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் தெரிவித்துக்கொள்ளல். இனிமையான சுவையான சுவீட் வகைகளை குளிர்பானங்களையும் உறவுகளுடன் சுவைத்தல்? பகல் வேளையில் ஒரு மாதத்திற்கு பின்னர் பகல் உணவை குடும்ப சகிதம் ஒரே அமர்வில் இருந்து உண்ணுதல் போன்றன பெருநாளின் சிறப்பம்சமாகும்.

ஒரு மாதமாக றம்ழானில் கற்றுக்கொண்ட பாடங்களான பொறுமை, விட்டுக்கொடுத்தல், இறை அச்சம், நல் அமல்கள் மேற்கொள்ளல், ஸதக்கா, ஸக்காத், பித்ரா போன்றவைகளையும் நினைவுபடுத்தி முழு வருடமும் றமழான் மாதம் காட்டிய நற்பண்புகளுடன் வாழ வேண்டியது எமக்குரிய கடமையாகும். எமது அனைத்து நடவடிக்கைகளும் நோன்பின் மான்பினை ஒழுகி மனிதன் புனிதனாக வேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும்.


அல்லாஹ் மனிதனுக்கு அளப்பரிய அருட்கொடை களை வழங்கியுள்ளான். அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தாவிட்டால் அருட்கொடைகளை இழக்கவேண்டி ஏற்படும். றமழான் மாதம் ஈழுவதும் நோன்பு நோற்று, அல்லாவிடம் இருகரம் ஏந்தி அழுது மன்றாடி கேட்ட பாவ மன்னிப்பு, நரக விடுதலை, மண்ணறையில் உள்ள பெற்றோருக்கான பிரார்த்தனை எமக்காக வேண்டிக்கேட்ட றஹ்மத் இவற்றை தொடர்ந்து நினைவுபடுத்தல் வேண்டும்.

இற்றைய தினத்தில் எமது மரண வேலை, மரணத்தின் பின் கப்ருடைய வாழ்க்கை, 'அதன்பின் நாம் சந்திக்கும் இறுதி நாளான மஃஷர் மைதானத்தில் உலகில் நாம் செய்த நன்மை தீமை பற்றிய கேள்வி கணக்கைப்பற்றி சிந்திப்போம்.

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் காட்டித்தந்த வாழ்க்கை முறைகளின் பரகாரம் எமது வாழ்க்கையை அமைத்திருந்தால் உயர்ந்த சுவர்க்கம் நுழையலாம். இல்லையேல் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும்.

இன்றைய தினத்தில் புத்தாடை அணிந்து. பெருநாள் கொண்டாட்டம் என்று நினைத்து. மதுபானம் அருந்துதல், போதைவஸ்து பாவித்தல், சின்மாவுக்கு செல்லுதல், சூது விளையாடல் போன்ற தீய காரியங்களிலிருந்து தவிர்ந்து நடத்தல் அவசியமாகும். இல்லையேல் நாம் ஒரு மாத காலமாக செய்த தியாகம் வீணாகிவிடும்.


உன்னதமான மார்க்கத்தையுடைய இஸ்லாமிய சகோதரர்களே! பல்இன மக்களைக் கொண்ட எமது நாட்டில்



மாற்றுமத சகோதரர்களுடன் இப்பெருநாள் தினத்திலும் ஏனைய நாட்களிலும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து அவர்களின் சமூக, கலாச்சார விழுமியங்களுக்கு மதிப்பளித்து அவர்களுடனான வியாபாரம், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய விடயங்களிலும் நல்லெண்ணம் ஏற்படக்கூடிய வகையில் வாழ்ந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். பெருநாள் கொண்டாட்டங்களை அயல்வாழ் பிறமத சகோதரர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம், மகத்துவமிக்க றமழான் மாதத்தில் உலக மக்களுக்காக இறக்கப்பட்டதுதான் புனித திருக்குர்ஆன். இதனை பொருள் விளங்க கற்று ஏனைய மதத்தினருக்கும் அறிமுகப்படுத்தி அனைத்து மக்களும் நேர்வழியில் நடந்து எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்றுக் கொள்வோமென இப்பெருநாள் தினத்தில் திடசங்கப்பம் கொள்வோம். வஸ்ஸலாம் வா ஆகிரத்தஃவானா அல்ஹம்து லில்வாஹி ரப்பில் ஆலமின்.

மௌலவி என்.எம்.எம்.இர்பான்
(தூரி) பேஷ்இமாம்
க.கே.எஸ் வீதி, மஸ்ஜித்
077 2724286




## ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள் எல்லோருக்கு

**World2Mobile**
போன் உறுதிப் பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
K.K.S Road, Jaffna 077 8585887

**New Gem Hotel**
சுவையான உணவுகளின் இருப்பிடம்.
New Gem Hotel
K.K.S Road, Jaffna
M.B.M Raees:-0778585887

**Glass House**
கண்ணாடி வகைகள், பிணைச்சல்கள், விதம் விதமான கைபிடிகள், அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
No: 311, K.K.S Road, Jaffna
0712769189


நியூ
மொ
நியூ பெரி
நியூ சின்
தொடர்பு
077879

**Rafa Filter Water**
ஐந்து சந்தியில் றபா சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் சிறந்த முறையில் நவீன கருவிகளைக் கொண்டு தயாரிக்கப் படுகின்றன. உங்கள் இல்லங்க ளிற்கும் விநியோகிக் கப்படும்.
355, Manipay Road, Jaffna. 0714114848

சுத்தம், சுவை, சுகாதாரம், சுவை மிகு புரியாணி றைஸ், சகல விதமான கொத்தும், ருசி
ரோல்ஸ், சமூசா, பற்றிஸ், வடைகளிற்கும் நாடுங்கள். அன்பான உபசரிப்புக்களுடன் உ
பரிமாறப்படும் ஒரே இடம்.
No: 357, Manipay Road, Five Junction, Jaffna
**உரிமையாளர்:** றிஸ்வான்
**Bismillah Hot**

# ப் பெருநாள் சிறப்பிதழ்


## 8 [வெள்ளிக்கிழமை]





- மலர் தயாரிப்பு -
கலாபூஷணம்
**எம்.எல்.லாபீர்**

## ஈதுல் பித்ர் ஆசிச் செய்தி



அல்ஹாஜ் மௌலவி
ஏ.எம்.ஏ.அஸீஸ் (காசிமி) (யாழ்/கிளி/மாவட்ட உலகமாசபை சர்வமத தலைவர். ஜே.பி)

இன்று உலக முஸ்லீம்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஈதுல் பிதர் நோன்புப் பெருநாளை கொண்டாடுகிறார்கள். அனைவருக்கும் எமது நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முப்பது நாட்களிலும் இறையருளையும், ரஹ்மத்தையும், பாவ மன்னிப்பையும், நரக விடுதலையையும், பொறுமையோடு துஆ செய்து அனைத்துப் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்துவிடுவான் என்ற பேராசையுடனும் பேரார்வத்துடனும் இப் பெருநாளை நாம் கொண்டாட தயாராகியுள்ளோம்.

எனவே, இனிவரும் நாட்களையும் நாம் பேணி அனைத்து மக்களும் எம் சகோதரர்கள்தான் என்ற வேற்றுமை களைந்த ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் சந்தோஷமாக நாம் அனைவரும் வாழ வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகின்றேன். சமாதானமே சக நல்வாழ்வின் சந்தர்ப்பங்கள்! சந்தோஷங்களே சம யோஷதங்களின் அர்ப்பணங்கள். இதனை நாம் மனதில் இருத்தி வாழ வேண்டும்.

மீண்டும் அனைவருக்கும் ஈதுல் பித்ர் இனிய வாழ்த்துக்கள்.



அனைவருக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**கே.எம் நியாஸ் (நிலாம்)**
**(யாழ் மாநகரசபை உறுப்பினர்,**



அனைத்தின மக்களிற்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**எம்.எம.எம். நிபாஹிர்**
**(யாழ் மாநகரசபை உறுப்பினர்.**



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அணைத்து இஸ்லாமிய நெஞ்சங்களிற்கும் எனது இதயம் கலந்த நல் வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**ஐ.எல் நிராஸ்**
**(சம்மேளனத் தலைவர், யாழ் மாவட்டம்.)**



ஈதுல் பித்ரின் இளம் பிறை தோன்றிட
இறையருள் இலங்கு கறைகள் அகன்றிட
ஈகைத் திருநாள் இன்பம் பொங்கும்
இனைந்து எங்கள் இதயம் முழங்கும்
அல்லாஹீ அக்பர்! அல்லாஹீ அக்பர்.
இகற்தனில் செய்த பாவம் நினைத்து
இரவினில் விழித்து இரு விழியழுது
ஏகன் இறைவன் மறைவழி நடந்தோம்.
ஏர்தல் நபிவழி ஏற்றமடைந்தோம்.
கெடுமதி கேள்வி பார்வையைக் காத்து
தினரும் உணர்வை இதயத்தில் தீய்த்து
கோள், புறம், கோபம் யாவும் காத்தோம்.
குணம் தனில் மனித புனிதராய் ஆனோம்.
ஈகை கறையச்சம் உளத்தூய்மை கொண்டு
ஈமானிய ஒளியை இதயத்தில் ஏற்றி
இறையோன் காட்டிய வழி நடந்தோம்
ஈதுப் பெருநாள் தனில் இணைந்தோம்.
ஈத்முபாரக்!

சாவனத்துச்
சுகந்தம்
வீசிய
ரமழானே!
**யாழ் அஸீம்.**


## ...கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்

**...ு பாட்டா**
**...மாத்த விற்பனை.**
...பெரிய பாட்டா - 85/-
...சின்ன பாட்டா - 69/-
...ர்புகளிற்கு:-
...794148

*Banu Phone Shop*
K.K.S Road, Jaffna Saththera santhi, Jaffna. Tel: 0772727700

...ருசிமிக்க
... உணவு
*...otel*

**வீடுகளிற்கான பெயின்ரிங், பிளம்பிங், வயறிங் வேலைகள் தரமான முறையில் செய்து தரப்படும்.**
**தொடர்புகளிற்கு: – 0779951684**

உன்னத கலைநயம்மிக்க உங்கள் எழில் மிகு
கேசத்திற்கேற்ற அதி நவீன மோஸ்தர்களின் தரம்
குன்றா தங்கப் பவுண் நகைகளை செய்து பெற்றிட வாரீர்!

# அசோகா
## நகை அகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
**இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P: 021 222 6290**


(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# புதிதாக வீட்டை அமைக்கும் போது கவனிக்க வேண்டியவைகள்

வீட்டின் ஆரோக்கிய அமைவு, வசிக்கும் அங்கத்தவர்களின் சௌகரியத்திற்கும் உள ஆரோகியத்திற்கும் இன்றியமையாததாகும். அரோக்கியமற்ற அமைவு, வயதான காலத்தில் பல அசௌகரியங்களையும் உள நெருக்கீடுகளையும் ஏற்படுத்திவிடும்.

வயதுடன் ஏற்படும் பார்வைக்குறைவின் பின்னராகவோ அல்லது பார்வைக் குறைபாடுடைய விருந்தினர் எம் வீடுகளிற்கு வருகை தரும் போதோ எம் வீடுகள் அவர்களிற்கு நட்பானதாகவும் ஏற்ற விதத்திலும் பெரும்பாலும் அமைந்திருப்பதில்லை அவ்வாறு அமையாததன் காரணமாக பல உள அசௌகரியங்களிற்கும் உடல் காயங்களிற்கும் உள்ளாக நேரிடுகின்றது. மிகுந்த விருப்பத்துடன் கட்டிய வீடு பார்வைக்குறைவின் பின்னர் வாழ்வதற்கு அசௌகரியமாகத் தோன்றுவது எதனால்? என்ற கோள்விகளிற்குப் பதில் கண்டு கொள்வது நன்று. அழகியலுக்கு முன்னுரிமை கொடுத்து அமைக்கப் படும் வீடுகளில் பார்வைக் குறைபாடு உள்ளவர்களும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் சில அம்சங்களை இணைத்துக் கொண்டால் வேண்டாத விளைவுகளைத் தடுத்திடலாம். புதிதாக வீடுகளை அமைக்கும் போது நாம் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் குறித்து நோக்குவோம்.




### தரை அமைப்பு

பார்வைக் குறைபாடுடைய அங்கத்தவர்கள் நாளாந்தம் பயன்படுத்தும் பகுதியின் தரையமைப்பு வழுக்கும் தன்மையற்றதாக இருத்தல் சிறப்பு. பார்வைக் குறைபாடுடையவர்களும் படிகளை இலகுவில் இனங்காணத்தக்கவாறு தரை மாபிள் வர்ணத் தேர்வை மேற்கொள்ளுதல் வேண்டும். தரை மாபிள் நிறத்தில் இருந்து படி மாபிள் நிறத்தை கடும் நிறமாகவோ அன்றி வேறு நிறத்திலோ அமைத்துக் கொள்ளலாம். தரை மட்டங்கள் வெவ்வேறு தளங்களில் அமையும் போது அவற்றை இலகுவில் இனங்கண்டு கொள்ளும் விதமாகவும் உடல் சமநிலையைப் பேனிக் கொள்ளும் வகையிலும் நிறத் தேர்வுகளை செ ய்திடல் வேண்டும். அல்லது ஒரு தளத்தின் முடிவைக் காண்பிக்கும் வகையில் கடுமையான நிற மாபிள்களைக் கொண்டு கோடிட்டுக் காண்பிக்கலாம்.

### சுவர் மற்றும் கதவுகளின் அமைப்பு

சுவரிலிருந்து கதவுகளை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் நிறத் தொரிவுகளைச் செய்தல் வேண்டும். சில வீடுகளில் கதவுகளையும் சுவர்களையும் இனங் கண்டு கொள்ள முடியாது. ஒரே நிற வர்ணத்தைப் பூசியிருப்பார்கள் உண்மையில் கதவுகளை இனங்காணக் கூடிய வகையில் அமைப்பதன் மூலம், தரையில் அடிபடுதல், தரையில் விழுதல், அடிகாயங்கள் போன்ற விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். மலசல கூடங்களில் இது குறித்து கரிசனை அதிக [illegible] அமைத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் மலசல கூடத்தின் கதவின் நிறத்தை சுவர் நிறத்திலேயே தேர்வு செய்கின்றனர் இது ஒளி மங்கிய நேரத்திலும் பார்வை மங்கிய காலத்திலும், கதவினைக் கண்டறிவதில் சிரமத்தை ஏற்கடுத்தி வீடும்.

### கழிப்பறை அமைவு

மலசல கூட இருக்கையின் வர்ணமும் சுவர் மாபிள் வர்ணமும் ஒரே நிறத்தில் இருத்தல் கூடாது கடுமை – மென்மை வர்ணங்களில் அவற்றை அமைப்புற வடிவமைக்கும் போது ஒளி குறைந்த வேளைகளிலும் மலசல கூட இருக்கையை (கொமட்)இலகுவில் இனங்காண முடியும். இது அவர்களின் உளச் சௌகரியத்தை மேம்படுத்தும். மலசல கூட இருக்கையில் அமர்வதற்தும் எழும்புவதற்கும் ஏற்ற பிடிமான அமைப்புக்கள் பொருத்தப் பட்டிருந்தால் வயதான காலத்தில் இது மேலும் அவர்களிற்கு நட்பான சூழலாக மாறிவிடும்.

### பொருள்களின் அமைவும் கரிசனையும்

நாளாந்தம் வீட்டினைப் பயன்படுத்தும் போதும் அவர்களின் நட்புச் சூழலில் குழப்பங்களை ஏற்படுத்திடாத வகையில் வீட்டு உபயோகப் பொருட்களை பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்களிற்கான அறையில் குறைந்தளவிலான பொருட்களையும் தேவைக்கு உரித்தானவற்றையும் மட்டுமே வைத்திருத்தல் வேண்டும். முடியுமானவரை அவற்றைத் தொடர்ந்தும் ஓரிடத்திலேயே பேணிவருதல் வேண்டும். அதாவது அடிக்கடி இடம் மாற்றம் செய்யாது இருத்தல் வேண்டும்

மேடு பள்ளமான தரையமைப்பு, ஈரமான தரை, மங்கிய வெளிச்சம், ஒழுங்கற்று சிதறிக்கிடக்கும் பொருட்கள் போன்ற அமைவுகள் அடிக்கடி தடுமாறி விழக் காரணமாக அமைந்து விடுகின்றன. எனவே இந்த விடயங்களில் அதிக கவனத்தைச் செலுத்தி இயலுமானவரை அதிலிருந்து விடுபட உங்களைத் தகவமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இச் செயல்மாதிரிகள், பார்வைக் குறைவுற்றவர்களிற்கு ஏற்ற நட்புச் சூழலாக வீட்டை மாற்றி அமைத்து அவர் தம் வாழ்வை சந்தோசப் பூங்காவாக மாற்றி விடும்.

**மருத்துவர் பொ.ஜெசிதரன்**
சுகாதாரவைத்திய அதிகாரி
யாழ் மாநகர சபை

# கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

என்ன முருகர் முணுமுணுத்துக் கொண்டு வாறார்? ஏதும் விஷயங்கள் அறிஞ்சிட்டரோ, என மரத்தடியில இருந்த தில்லையின் கிண்டல் பேச்சு முருகர் காதில் பட்டது. ஓம் ஓம் உங்களிற்குச் சும்மா இருக்க சுகமா இருக்கும் நாங்க அங்க இஞ்ச அலஞ்சாவது ஏதும் தேடிப்பாக்கிறம். எங்க அலஞ்சாலும் சந்திக்கு வராமலா போகும் என்னமுருகண்ணே ஏதும் வெளிக்குமா?

எல்லாம் "வரும் ஆனா வராது" எண்ட நிலையில தான் இருக்கு எங்கடயள் வெளிநாட்டுக்குப் போய் கற்றது விவாகரத்து ஒன்று தான் இதைப் போல தான் எங்கட அரசுக்குள்ளயும் எப்ப பிரியுறது? எப்படிப் பிரியுறது? எண்ட குசுகுசுப்பி திரியுறதப் பாத்தா......

அப்ப எங்கட விஷயம் ஒண்டும் நடக்காதோ அண்ணே? எண்ட கனகரின் ஏக்கம் முருகருக்கு பொத்துக் கொண்டு வந்தது கோபம்.

நடக்கும் நடக்கும் எல்லாரும் பொலிநடயாத் தான் நடக்க வேணும் நாம...

இந்தா வருகுது வேலை, அந்தா நடக்குது அலுவல் எண்டியின, தமிழர் பிரச்சினை தீரப் போகுது, பேச்சு வார்த்தை இப்ப நடக்குது என்டியள், 50 ஆயிரம் வீடு அடுத்த மாதம் தருவினம் என்டியள், விடாத காணியள் விட்டிடுவினம் என்டியள், அரசியல் கைதியள் பொதுமன்னிப்பில விடுவினம் எண்டியள் எல்லாம் புள்வாணமாய் போயிடுமோ, என்ற கனகரின் கனத்த குரலுக்கு

இப்ப என்ன சொன்னனான், வரும் ஆனா வரரது நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்து விடும் நிலை தான் கனகர் இப்ப.

இதைத்தான் சொல்லி அடுத்த தேர்தலையும் நடத்தப் போகினம் போல இது தானே எங்கட தலைவிதியாப் போச்சு.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு எல்லே சீவன் போகுது. என்ட நிலையில சிறையில சித்திரவதை படுகிற எங்க சீவன்கள் பற்றி இப்ப எவருக்கும் கவலை இல்லை. தமிழர் தீர்வு எண்டு சொல்லியே தங்கட இருக்கய பாதுகாக்கினம் சிலர். இவையள குறை சொல்லியே தங்கட அரசியலக் கொண்டு போகினம் பலர். காணிக்கு காசு கொடுத்தா விடுவினம் எண்டு தங்களுக்குள்ளயே கைமாறுது வீட்டுத்திட்ட பணம். வேலைக்கலைஞ்சு இந்தா அந்தா எனண்டு கடத்திக் கொண்டு அங்கால பல பதவிகள் நிரப்பிறத எங்கடயள் பாத்துக் கொண்டு தானே இருக்கினம். இதுவர எத்தின பதவியள். சாட்டுகள் போராட்டங்கள். குரல் கொடுப்புக்கள் இருக்குது. இதுகள் தானே பாரபட்சம் எந்த ஆட்சியிலயும் தவறாமல் நடக்குது. ஜநாவும் பாராமுகமாக இருக்குது

வீட்டுத்திட்ட பணம் எவ்வளவைக் கைமாற கதை சொல்கிறார்கள் பாத்தியோ புணர்வாழ்வு எண்டு இப்ப அங்கததான் இப்ப பலர் வாழ்விற்கு புணர்வாழ்வு அங்க நடக்குது பாத்தியே. எல்லாம் மனம் கொண்ட மதம் மதம் கொண்ட தாலி, மாற்றான் எக்கேடு கெட்டால் என்ன. எண்ட மனநிலை தானே மறைஞ்ச சீவன்களை நினைச்சு கண்ணீர் விடவும் கதை அளக்கினம். அங்கயும் அவர்கள் மதம் பாத்து இனம் பாத்து பெரும் தலைகள் கலந்து கொண்டத பாத்தாய்தானே. இதுவா எமது நாட்டின் ஜனநாயகம், இது தான் கருணை அன்பு காருணியம்.

அடுத்த தேர்தல் வரப்போகுது அதுக்கும் பேச்சுக்கள் தயாராகிறது. உலக நாடுகள் உன்னிப்பாய் பாத்திருக்கு எல்லாம் விழிப்பாய் இருந்து வாக்குப் போடுங்கள் உலகநாடு உதவிக்கு வரும் என்பார்கள் களகா. முள்ளி வாய்க்கால் உலக நாடு பாக்கத்தானே நடந்தது என்ன செய்தார்கள்?

முள்ளி வாய்க்காலையும் உலக நாடுகள் பாத்திருக்க தானே உயிர் கொள்ளை அடித்தார்கள். இன அழிப்பு இல்லயாம், எவரும் போரில் கொல்லப்படவில்லையாம். என இப்ப புதுக்கதை சொல்லும் வீர வசனம் யாரைப் பாதுகாக்க. அப்படி என்றால் எங்கு நடக்கும் அஞ்சலிகளும், பாராட்டு பரிசளிப்புகளும் எங்கு நடந்ததற்காக கௌரவிக்கின்றார்கள் எந்த நாட்டோடு போராடி வெற்றிகண்டார்கள்.

ஐயே பாவம் இவர்கள் அறியாமல செய்கிறார்கள் இவர்களை மன்னியும் எனடற வார்த்தைகளை சொல்லி மன்னிப்போம். தேர்தல் வருமாம் சிந்தித்து சிந்தித்து செயற்படுங்கள் சீரான மனிதர்களை இனம் காட்டுங்கள் தங்களிற்குள்ளே முரன்படும் வாய்படும் வாய்ப்பந்தல் காரரிட்ட கவனமா இருங்கள்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனி அம்பாளின் வருடாந்த மகோட்சவம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனி அம்பாளின் வருடாந்த மகோட்சவம் 14.06.2018 அன்று கொடியேற்றத்துடன் ஆரமடபமாகி 29.06.2018 வெள்ளிக்கிழமை இரவு தெப்பத்திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது. இம் மாதம் 23ம் திகதி மஞ்சத் திருவிழா, 26ம் திகதி சப்பறத் திருவிழா 27ம் திகதி தேர்த்திருவிழா, 28ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் சிறப்புற நடைபெறவுள்ளது.



இப்பிரபஞ்சத்தின் ஆக்கத்திற்கும் இயக்கத்திற்கும் மூல காரணியாக அமைவது மகா சக்தியாகும். படைத்தல் தொழிலைப் பிரம்மாவும், சரஸ்வதியும் ஏற்றனர். காத்தல் தொழிலை விஸ்ணு ஏற்க அவரின் சக்தியாகிய மகாலக்சுமி இணைந்தார், அழித்தல் தொழிலுக்கு நியமனமான உருத்திரனின் சக்தியாக துர்க்கை தோற்றம் பெற்றார். இவ் விதமாக சக்தியின் வடிவமாக பெண் எனும் மகா சக்தி இந்தப் பிரபஞ்சத்தை ஆளுகை செய்து வருகின்றது. அந்த வதையில் நயினாதீவில் நாகபூசனியாக அம்பாள் பக்த அடியார்களிற் அருபாளித்துக் கொண்டிருக்கின்றாள். தண்ணீராவும் உணவையும் பெண்ணாகப் பார்த்தும் பழக்கப்பட்ட தமிழருடைய வரலாற்றில் மென்மையின் அம்சமாகப் பார்க்கப்பட்ட பெண் வலி சுமந்த நங்கையாகவும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவைக்கு ஆட்பட்டாள். இதனால் புறநானூறு வீரத்தைப் புலப்படுத்தும் மங்கையாகவும் நாகபூசனி நாகத்தின் மீது தேரேறி அருள் பாலிக்கும் நாட்களில் யாழ்களரியுடன் அம்பாளின் விழா சிறப்புற வாழ்த்துகின்றது.

கட்டுரை

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 4

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் - 1

பரமபுத்திரன்

**உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள்**

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்" என்பது தமிழர்களிடையே காணப்படும் ஒரு முதுமொழி. ஈழத்தமிழர்களின் போராட்ட எழுச்சியிலும், அதன் பின்னடைவுகளிலும் சிங்கள அரசு மிகவும்பயன்பெற்றது என்பது முன்பே கூறியிருந்தேன். அதிலும்ஈழத்தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தில் கண்டிப்பாக வெற்றி பெற்றே ஆகவேண்டும்என்ற விருப்பும் நம்பிக்கையும் கொண்டு தீவிரமாக போராடியவர்கள் விடுதலைப்புலிகள். இதனால்தான் பெருமளவு தமிழர்கள் விரும்பிய விடுதலைப்புலிகளை சிங்கள அரசும், அந்த அரசிற்கு கைகொடுக்க விரும்பியோரும் பலமாக எதிர்த்தனர்.


சொல்லும் செய்தி சுருக்கமாகவும் விளக்கமாகவும் விரைவாகவும் அமைய வேண்டும் என்பது எல்லோராலும் விரும்பப்படும் ஒன்று. அந்த வகையில் தமிழருக்கான தனி நாடு அமையும், தனியரசு அமையும், ஈழத்தமிழராகிய நாம் விடுதலை பெற்று அமைதியாக உயர்ந்த வாழ்க்கை வாழ்வோம் என்று உறுதியாக ஈழத்தமிழராகிய நாம் நம்பவேண்டும். சொல்லும் செயலும் ஒன்றாக அமைந்தால்தான் வெற்றி கிடைக்கும். இந்த வெற்றி நினைப்பு எவ்வாறு குலைகிறது? எங்கள் ஈழப்போராட்டம் எவ்விதமான தடைகளை சந்தித்தது, சந்திக்கிறது? அந்த தடைகளுக்கான காரணங்கள் என்ன? எதற்காக இந்தத்தடைகள் தலைதூக்குகின்றன? என்பது தொடர்பான ஒரு சிந்தனையே இத்தொடரின் நோக்கம். எனவே சில வரலாற்று அனுபவங்களை, சுருக்கமாக அசைபோட்டாலே இனியாவது தெளிவடைய முடியும் என்பது எனது நம்பிக்கை.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்கான விழிப்பு ஆயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பதில் ஆரம்பித்தது என்று சொல்லமுடியும். அப்படியானால் இக்காலத்தின் முன் ஈழத்தமிழர்கள் விடுதலை வேண்டவில்லையா எனக் கேட்கலாம். ஆனால் அந்நிய வருகையின்பின் இலங்கை முழுவதும் ஒரே நிர்வாக அலகின் கீழ் வந்தபின்பு சுதேச மக்களும் ஆட்சியில் பங்கு பற்றும் வாய்ப்பளிக்கப்பட்டது. இந்தவேளையில் சேர். பொன். அருணாசலம் சிங்களருடன் சேர்ந்து இலங்கையின் விடுதலைக்காக தொழிற்பட்டுள்ளார். ஆனால் அரச அங்கத்துவம் என்று வரும்போது சிங்களவர் முற்றுமுழுதாக தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தலும், தங்கள் உரிமைகளை வெல்வதும் அவசியம் என்றும் எண்ணினார்களே தவிர, தமிழ் பிரதிநிதித்துவம் அல்லது தமிழ்மக்களின் உரிமைகள் என்பன முக்கியத்துவம் பெறவில்லை. இதனால்தான் அவர் தெளிவான தீர்மானத்தை எடுத்து, அங்கிருந்து பிரிந்து வந்து தனித்த கட்சியை ஆரம்பித்துள்ளார். எனவே அன்றே அவரின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு கைகோர்க்க ஏனைய தமிழ்த்தலைவர்கள் வி[illegible] பியிருந்தால் ஒரு வேளை பிரித்தானியாவிடமிருந்தே [illegible]ங்கள் உரிமைகளை பெற வாய்ப்பு கிடைத்திருக்கலாம். சேர். பொன். இராமநாதன்கூட, இதற்காக அருணாசலம் அவர்களுடன் சேர்ந்து தொழிற்பட முயற்சிக்கவில்லை என்றே சொல்லமுடியும். கல்வியில் வளர்ந்த பெரியோர்கள், தமிழரின் முன்னோடிகள் என்றெல்லாம் கருதப்பட்ட தலைவர்கள், அதிலும் உலக அளவில் புகழ்பெற்றஈழத்தமிழ் பெரியவர்கள் கூட நல்லதொரு தீர்வை பெற்றுத்தராமைக்கு என்ன காரணம்.

வரலாறு என்பது ஒரு எரிச்சலூட்டும் கற்கையாக எமக்கு தெரிகிறது. பாடசாலை மாணவர்கள் கூட ஏனிந்த வரலாற்று படிப்பு என்று வரலாற்றை வெறுப்பதுண்டு. காரணம், வரலாற்றின் அவசியம் புரியாதநிலை, வரலாற்றினை சுவைபட புரியும்படியாக யாரும் சொல்லித் தராதநிலை எனலாம். இதைவிட மேலும் சில காரணங்கள் சொல்லமுடியும். அதாவது வரலாறு என்பது உலக வரலாறு என்ற அடிப்படையில் எங்களைப்பற்றி அல்லது எங்கள் நாட்டைப்பற்றி எமக்கு சொல்லித்தருவதிலும், உலகம் தொடர்பாக அதிக செய்திகளை சொல்லித்தருதல் காரணமாக இருக்கலாம். உண்மையில் எமக்கு உலக அறிவு வேண்டும், ஆனால் அதற்கு முன் எங்களைப்பற்றிய தெளிவான அறிவு வேண்டும் என்பது ஒத்துக்கொள்ளவேண்டிய ஒன்று. எனக்கும் வரலாறு என்பது பிடிக்காத ஒன்றாகவே இருந்தது. ஆனால் ஈழத்தமிழர்கள் தொடர்பான வரலாறு தெரிந்தபின்புதான் எனக்கும் பல செய்திகளில் தெளிவுகள் பிறக்க ஆரம்பித்தன. அதனால்தான் சுருக்கமாக என்றாலும் வரலாறு தெரிந்தால்தான் எங்களை அறியமுடியும். வரலாறு என்பது பிழை எது, சரி எது, தீமை எது, நன்மை எது என்பவற்றுக்கான அடித்தளத்தை அமைக்க எமக்கு வழிகாட்டும் நல்ல அனுபவ சான்று. எனவே வரலாற்றினை அறிந்து வைத்தல் எமக்கு மிக முக்கியம். அதுவே எங்களுக்கு வெற்றி தோல்விகளை எடுத்துக் காட்டும் முக்கியமான ஆசிரியன். வெற்றிகரமாக அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்லும் சிறந்த ஆசான்.

இலங்கை 1948 பெப்ரவரி 4இல் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவ்வாறான ஒரு விடுதலை பெறும் காலம் வரை தமிழர்களும் இலங்கையில் இருந்துள்ளார்கள். கல்வியில் உயர்ந் தோரும் இருந்துள்ளார்கள். ஆனால் இக்காலகட்டத்தில் யார் பெரியவன் என்ற தன்முனைப்பு ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் விடுதலையை வென்றெடுக்க விடவில்லை என் றே சொல்லமுடியும். அதாவது ஒவ்வொரு படித்தவர்களும் நானே பெரியவன் என்றும், என்னால் தான் எதுவும் நடக்கவேண்டும் என்றும், மற்றவர்களால் நடந்தால் எனக்கு மதிப்பில்லை என்றும், நினைத்தது மட்டுமன்றி அந்த எண்ணக்கருவை பலமாக பற்றியிருந்ததால் தங்க ளது வெற்றிதான் பெரிதாக தெரிந்ததே தவிர தமிழர்க ளின் வெற்றி பெரிதாக தெரியவில்லை. இதனால்நாங்கள் தோற்றோம் என்பதுதான் உண்மை. இது இன்னும் முடியவில்லை என்பது மட்டுமல்ல இன்றும் தொடர்வதை எங்களால் நேரடியாகவே அவதானிக்க முடியும்.

தொடரும்.......



# யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா

## - 1706 பேர் பட்டம் பெற்றுக்கொண்டனர் -

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 33 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி கடந்த 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ் பத்மநாதன் தலைமை[illegible]ில் இடம்பெற்றது.

7 [illegible]களாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் க[illegible]ருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் மற்றும் பட்டப்[illegible]ற்கைகள் பீடங்களைச் சேர்ந்த ஆயிரத்து 223 உள்வாரிப் [illegible]ட்டதாரிகளும், 43 டிப்ளோமா தாரிகளும் [illegible]ட்டம் வளங்கிக் கௌரவிக்கப்பட்டனர். யாழ். பல[illegible]லைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய[illegible]ச் சேர்த 440 வெளிவாரிப் பட்டதாரிகளின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. இம்முறை இருவர் கலாநிதிப்பட்டங்களையும், 7 பேர் முதுமெய்யியல்மணிப் பட்டங்களையும், வவுனியா வளாகத்தைச் சேர்ந்த 170பேர் முதுகல்விமாணிப் பட்டத்தையும், 7பேர் சுகாதார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதள்களையும், 21 பேர் சைவ சித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டங்களையும், 11 பேர் முது வியாபாரமணிப் பட்டங்களையும், 4 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், 95 பேர் மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி பட்



டங்களையும், ஒருவர் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டங்களையும், 78 பேர் விஞ்ஞானமாணி சிறப்பு மற்றும் 79 பேர் விஞ்ஞானமாணி பொதுப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேலும் 16 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டங்களையும், 8 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டங்களையும், 7 பேர் விவசாய விஞ்ஞானமாணி பட்டங்களையும், 146 பேர் நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பு) பட்டங்களையும், 459 பேர் சிறப்புக் கலைமாணி, 81 பேர் பொதுக் கலைமாணிப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் 5 பேர் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 9பேர் இதழியலில் தகைமைச் சான்றிதழ்களையும் 16 பேர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 13 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றனர். வெளிவாரியாகப் பட்டங்களைப் பெற 374 கலைமாணிப் பட்டதாரிகளினதும்,ஒரு இசைமாணிப் பட்டதாரியினதும், 3 நடன மாணிப் பட்டதாரியினதும் 37வணிக மாணி, 25வியாபார முகாமைத்துவமாணி பட்டதாரிகளினதும் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. மொத்தமாக இம்முறை 1706பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, சகல கற்கை நெறிகளுக்குமாக 34தங்கப் பதக்கங்களும், 48பரிசில் கள் மற்றும் புலமைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கவி நிலம்

## ஒழுக்கம் விழுப்பம் தரலான் உயிரினும் ஓம்பப்படும்

ஒழுக்கம் ஒதுங்கியது ஓரமாய்
வெட்கம் அதைவை என்கிறார் தூரமாய்
கற்பு என்பது இன்று பாரமாய், கருக்
கலைப்பு என்பது சர்வ சாதாரணமாய்

கதைப்பார் யாழ் ஒழுக்கம் பற்றி உதாரணமாய்
உதைப்பார்.எம்முன்னோர் தவறினால்க் கட்டாயமாய்
புதைக்கிறார் ஒழுக்கம் இப்போ நிரந்தரமாய்
விதைத்தார் காமத்தை எங்கும் தந்திரமாய்

மணம் முடிக்கமுன் உறவு வேகமாய்
மனம் வெதும்புது நடத்தை அவ்வளவு கேவலமாய்
காதலென்கிறார் காமத்தை உண்மைக்கு விரோதமாய்
கட்டிலிட்டு தீர்க்கின்றார், கலைக்கின்றார் சந்தோசமாய்.

காதலென்கின்றார் கட்டிப்பிடிப்பதைத் தெருவோரமாய்
அன்பு என்கிறார் கட்டிலிடுவதை அதற்கு அர்த்தமாய்
பித்தம் பிடித்தே பிதற்றுகிறார் பிள்ளை பெற்றவர் எங்குமாய்
பிழையான வழி பிழையானது திகழுங்கள் ஒழுக்கமாய்

தென்னிந்திய சினிமாக்காமம் இவர்கள் உதாரணமாய்
தெளிவில்லா வயதில் அதை ஏற்றதன் காரணமாய்
அழகிய கற்பைப் பறிகொடுத்து பரிதாபமாய்
அழகு அருவருப்பானது படுக்கையின் பின் இதுவே யதார்த்தமாய்

கட்டிலில் ஒருவன் பலகாலமாய்
வாழ்க்கையில் இன்னொருவன் பலவருடமாய்
கொடுக்கும் போது சிந்தியுங்கள் ஏனிவ்வளவு மடமையாய்
கெடுக்கும் போது சிந்தியுங்கள் ஏனிவ்வளவு மட்டமாய்

“நம்பிக்கை இல்லையா என்னில்” கேட்டதன் காரணமாய்
நம்பித் தேகத்தை கையளிக்கின்றார் பூரணமாய்
எதையெதையோ சொல்கின்றனர் சலித்ததும் காரணமாய்
ஏய் பெண்ணே நீ வாழவேண்டும் உதாரணமாய்.

பதினெட்டில் திருமணம் செய்யாமல் சட்டபூர்வமாய்
“பற்றி எரியாமல் திருமணம் செய்தல் நன்று”
கணவன் மனைவி பற்று பற்றுதலே இதற்குக் கழுவாய்
கடவுளிடம் கேள் துணையை இப்போதே தொழுவாய்



# அன்ரன் அருள்வண்ணன் கவிதைகள்



### கறுத்தாயி கண்களிலே சிறுத்து சிக்குண்டேன்

கடலோரம் பிறந்தாள்
கற்கையிலே சிறந்தாள்
கறுத்தாயி கண்களிலே
சிறுத்து சிக்குண்டேன்

பொறுப்பான பெண்ணாய்
புடமிட்ட பொன்னாய்
பொறுமையுடன் கண்ணாய், என்
புண்ணை ஆற்றினாய்

வெண்ணெய் வெள்ளையன்பாணை
பண்ணையார் பிள்ளை உண்டு படிக்க
திண்ணையில் படித்து
தீட்டினாய் அது சாதனை

உன்னை உனதூக்கத்தை
உச்சிமோந்து உவக்கும்
உள்ளம் உயிர்
உடல் அது எனது

கள்ளம் இல்லாக் காதல்
பள்ளம் தேடும் காட்டாறு
வெள்ளை உளச் சுவரில்
வெளியே கீற வரும் குருதி

வரம்புகள் தடைகள்
வரையறை வாய்ப்பாட்டு
வகை ஊர்நகை, எவ்
வகையிலும் என்கை

உன் கழுத்தில்
ஊரறிய சீக்கிரத்தில்
உரசிநின்று பூட்டுவேன் தாலி
உயிரே! இறைவனே யெம் வேலி

### பாடிப் பார்த்து வந்தோம் எம்பாட்டை

தனித்துவம் தத்துவம்
தமிழினம்
தலை நிமிர்வு
தில் திடம் எம்மிடம்

ஒடியல்ப்பிட்டு ஒடியற்கூழ்
லட்டு அரிசிமாப்பிட்டு
அவற்றையும் உண்டதால்
அம்மாவின் திட்டு

உருண்டு திரண்டு உருவான பனாட்டு
பலகாரம் அது
காரமில்லாவிட்டாலும் கடிக்கவைக்கும்
ஈரமில்லா அவாவின் அகங்காரம்

செம்மண் குருமண்
கழிமண் கண்டாவளை மண்
மழை வந்தால் சேற்றுமண்
எல்லாமே எம்மண்

சில்வண்டு சிட்டுக்குருவி
தோட்டம் துலாமிதிப்பு
நெருஞ்சிமுள் நெற்றிவிய்வை
பலா சோறுட்டநிலா

பனைநிழல் சுடுமணல்
பண்ணாடை கருவாட்டுவாடை
பண்பாட்டை எம்பாட்டை
பாடிப்பார்த்து வந்தோம் எம்பாட்டை

குலையும் எம்நிலை
வலையும் வேடனும்
சிலையும் சிங்களமும்
சிதைவுறும் எம்வதை

# எல்லோரும் சேர்ந்தால் அதிகம் செய்யலாம்

**மருத்துவர் திருமதி ஆனந்தி**



லண்டனில் வசிக்கும் இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த மருத்துவர் திருமதி ஆனந்தி. கமலனாதன் அவர்கள் யாழிழ்மாவட்டத்தில் உள்ள சில முதியோர் சங்கத்தினரின் மகிழ்வூட்டல் மூலம் முதியோர் சங்கம நிகழ்வினை நடாத்த முன்வந்து கீயூடெக் கரிதாஸ் நிறுவன முதியோர் சங்கம நிகழ்வுக்கு மனமுகந்து அனுசரணை வழங்குவதுடன் நேரில் கலந்து மகிழ்வூட்டும் நாளில் யாழ்களரிக்கு தந்த செவ்வி.

**உங்கள் மருத்துவப் பணியோடு சமூகநேயப் பணிகள் செய்ய எப்படி தூண்டப்பட்டீர்கள்?**

இதந்கு எமது பெற்றோரே காரணம் அவர்கள் செய்த செயலும் என் மனதில் பகிர்தல் பற்றிய உணர்வை வளர்த்தது இதேபோல் அன்னெதெரேசாவின் வார்த்தைகள் என்னைத் தூண்டியது. " நீங்கள் கொஞ்சம் செய்யுங்கள் நானும் கொஞ்சம் செய்கின்றேன் எல்லோரும் சேர்ந்து அதிகம் செய்யலாம் ." என்ற அன்னையின் வார்த்தை செயல் வடிவமானது.

**உங்கள் சமுப் பணிகளை மேற்கொள்வதில் திருப்தி அடைகிறீர்களா? ஏனையவர்களையும் இணைத்துக் கொள்ள திட்டம் உள்ளதா ?**

எனது கடினமான வேலைப் பழு மத்தியிலும் பிற சேவைக்காக மேலும் நேரம் ஒதுக்கி நேரடியாக செயற் படுவதால் மனம் திருப்தி தருகிறது.

முதியோர் எங்கும் தனிமைப்பட்டிருப்பதை உணர்கிறேன். அவர்கள் தம் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பற்றி அக்கறை கொண்டாலும் முதியோர் பற்றி பிறர் அக் கறை கொள்வது மிகக் குறைவாகக் காண்கின்றேன். சமுகத் தில் பின்நிலையில் இருப்பதால் அவர்கள்மீது அக்கறை கொள்ள ஆவலாய் உள்ளேன். எனது அப்பா 2016இல் தவ றியதால் அவரை ஒத்தவர்களின் மகிழ்வில் நான் திருப்தி அடைகின்றேன். நேரில் சந்தித்து மகிழ்வான அனுபவங் களை நண்பர்களுடன் பகிர்ந்து விழிப்பூட்டி இணைத்துக் கொள்ள முயலகின்றேன்.

**உங்கள் குடும்ப உறவுகள் இதற்கு ஆதரவு தருகிறார்களா?**

எனது சகோதரி, எனது மகள், உறவினர்கள் ஊக்க மூட்டி உதவமுன்வருவது எனக்கு உற்சாகமாய் உள்ளது.

**வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் இது போன்ற சமூக பெரியோர்களுக்கு உதவ முன்வருகிறார்களா?**

பல நண்பர்கள் தங்களுக்கு தெரிந்த சமுக நிறுவ னாங்கள் மூலம் உதவிவருகின்றார்கள். அவற்றை நேரடி யாக செய்ய முயலும்போது ஏற்படும் மனத் திருப்தியை நான் அனுபவிப்பதால் அவர்களின் ஒத்துளைப்பும் எமக்கு கிடைக்கும் என எதிர் ப ார்கிறேன். காரணம் பல்வேறுபட்ட தேவைகள் நேரில் காண்கின்றேன்.

இம்முறை உங்கள் மனப்பதிவுகள் எப்படி மூத் தோர் வீட்டில் முழு நேரத்தையும் செயல்படுத்துவதையும், பிற கிராம குழுக்களுடன் நட்பைப் பகிர்வதையும் இச் சந்திப் பில் கண்டு பாராட்டுகின்றேன். அவர்களுடன் பழகிய பொழு துகளில் அவர்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை கேட்டு கடைப்பிடிப்பதை கூறும் போது மனதுக்கு திருப்தி தருகிறது. வருடம் ஒருமுறை சந்திக்கும் நான் இனி வரும் காலத்தில் அடிக்கடி வர ஆவலாய் உள்ளது.பழகிய பொழு துகள் பெறுமதியானது. மனநிறைவைத் தருகிறது.இதனை ஒழுங்கு படுத்திய கரிதாஸ் கியூடெக் இயக்குனரும் பணியா ளர்களின் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது.

### பட்ட மரத்தில் பூவாய்

பட்ட மரத்தில் பூவாய்
பலர் வாழ்க்கை பூமியிலே
பாலை வனத்து கானல் நீராய்
பாசாங்கு காட்டி கட்சிகள் பூரிக்கையிலே
பாழடைந்து போனதுவோ?
பாரினில் எம்மவர் வாழ்வு!

நவீனம் எனும் அரக்கன்
நம்மவர் வாழ்வில் வந்து சேர
நானிலம் நான்காய் பிரிந்து
நாச காரராய் மாறியதேனோ?
நாம் எனும் கொள்கை போய்
நான் எனும் மமதையில் நம் வாழ்வு!

கடல் கடந்து சென்றும்
கட்சிதமாய் ஓங்கி நின்ற கலாச்சாரம்
காலத்தின் மாற்றத்தால் என்னவோ
காகிதத்தில் மட்டும் எஞ்சியுள்ளதோ?
காவலனாய் காத்து நின்ற ஆச்சாரம்
காலடியில் தூசாகியதோ நம் வாழ்வில்!

மனங்கள் மரக்கட்டைகளாய் மாற
மனிதம் மண்ணில் புதைந்தே போக
மானம் காக்கும் மானிடர்
மாயமாகி மர்மமாய் போனரோ?
மாறுமா மனித மனங்கள்
மலருமா மனிதம் –
பட்ட மரத்தில் பூவாய்



சொர்க்கமுனை வாணி

# முறித்துப்போடலாம் ஒட்டுவது கஸ்ரம் மரமும் அப்படித்தான் மனமும் அப்படித்தான்

- கோகிலா மகேந்திரன் -



**யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி 27.05.2018 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் அ.யேசுராசா தலைமையில் நடைபெற்றபோது,**

**உளவள ஆலோசகரும் மூத்த எழுத்தாளருமான கோகிலா மகேந்திரன் "மனவடு" எனும் தலைப்பில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

உளப்பிரச்சனை என்பதற்கு விசர் என்று அர்த்த மில்லை. இது மிதமான பிரச்சனையாகும். ஆறு நிபந்தனைகள் மேற்படி பிரச்சனைக்கு அளவீடாகும். இவற்றை இனம் காணுபவர் தகைமையுள்ளவராக இருக்க வேண்டும்.

**ஆறுவகை இனம் காணல்**

01) மனவடுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் அகப்பட்டவராக இருக்க வேண்டும். குறிப்பாக 23ற்கு மேற்பட்ட சம்பவங்களை அனுபவித்திருந்தால் மனவடு உருவாகும். 23 சம்பவங்கள் குறைவாக இருந்தால் ஒரு வருடத்தின் பின்னரும் மனவடு வரலாம்.

02) **எப்போ நடந்ததை இப்போ நடப்பதாக உணருவார்.** ஒரு வகையில் மீளவாழுதல் அல்லது ஊடுருவல் என்று இதைச் சொல்லலாம். இதயத்துடிப்புக் கூடுதல், வேர்த்தல், மயக்கம் வருதல், இப்போ நடப்பதாகப் பயப்படுவதால் ஆழ்மனதிலிருந்து ஒரு பிரச்சனை தூண்டப்படும்.

03) **தவிர்தல்:** சம்மந்தப்பட்டவரோடு ஈடுபாடுகளோடு உள்ளதைத் தவிர்த்தல். 2மணிக்கு ஒரு சம்பவம் நடந்திருந்தால் அந்த நேரத்தைத் தவிர்க்க யோசித்தல், நிறமாக இருக்கலாம், மணம், ஒளி இவற்றைத் தவிர்த்தல்.

04) **அதிபர மனஎழுச்சி:** நித்திரையாவது கஸ்ரமாக இருக்கும் காரணமில்லாமல் கோபம் வரும், கவனம் செலுத்துதல் கஸ்ரமாக இருக்கலாம்.

05) **மேற் சொன்ன நிபந்தனைகள் ஒரு மாதத்திற்கு அல்லது இன்று வரைக்கும் பிரச்சனை தொடர்தல்.**

06) **மேற்படி 5 விடயங்களும் இருப்பதால் நாளாந்த வாழ்வில் குழப்பம் ஏற்படும்.** உதாரணமாக வேலை செய்யும் வினைத்திறன் குறைந்து காணப்படும். இவ்வகையானவை இருந்தால் மனவடு இருப்பதாக அர்த்தப்படும். மனவடுக்கள் பெரும்பாலும் அவதானிக்கப்படுவதில்லை. இவற்றிற்கு உளவளத் துணை தேவை. அவற்றில் மனச்சோர்வும் ஒன்று.

மதுப்பாவனை, போதைப்பாவனை, மனவடு உள்ளவர்களையே தொற்றிக் கொள்கின்றது. எமது சமூகத்தில் பீடித்துள்ள உளப்பிரச்சனையான மனவடுவை கையாள அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மூளையில் ...றம் ஏற்படும் மூளையின் நடுப்பகுதி (கிப்பகம்பஸ்) எனப்படும் பகுதி சிறிதாகும். இது தான் ஞாபகத்திற்கு முக்கியமானது. ஞாபகம் பாதிக்கப்பட்டால் மாணவருக்கு கல்வியில் பிரச்சனை வரும்.

இட, நேர ஒழுங்கு மாறியிருக்கும் சுயசரிதை ஞாபகம் மாறுதலடைந்திருக்கும் நரை, நிறப்பொருள் முன் மூளையில் உள்ளது. பிள்ளைக்கு அடிச்சால் அது பாதிக்கப்படும்.



**துண்டுபட்ட ஞாபகம்**

ஞாபகம் என்பது மிக முக்கியமானது. துண்டு பட்ட ஞாபகத்தை மீள எடுக்க முயலவேண்டும் சம்பவம் நடந்த போது மாயவலைப் பின்னல் கண்டது-கேட்டது-எண்ணங்கள் இந்தப் பின்னலில் ஒன்று தூண்டப்பட்டால் முழுவலைப்பின்னலும் மேல் வரும். இதனால் என்ன நடக்கும் எண்டால் 'வள்' என்று பாய்வினம். அனாவசியமான கோபம் வரும். உறவுப் பிரச்சனைகள் இதனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. எங்க போனாலும் பிரச்சனைகளிற்கு சிகிச்சை அளித்தால் 12 நாளில் குணப்படுத்தலாம். சிகிச்சை அளிக்கா விட்டால் 30 வருடம் செல்லும். இதைத்தான் காலம் மாற்றும் என்கிறோம்.

> நாளைய சமூகம்
> எம்மை நினைக்க வேண்டும் என்றால்
> போகிற பாதை சரியாக இருக்க வேண்டும்
> நல்லதைப் பார்க்க வேண்டும்
> தீயவரோடு பழக வேண்டாம்

ஆனால் வயது போய்விடும்.

மயக்கம், தற்கொலை எண்ணம், ஆளுமை அறிவு, யதார்த்தம் மாறுவதால் ஏற்படும் பிரச்சனைகள் சொல்லப்படுவதில்லை, கேட்கப்படுவதில்லை. ஒருவர் சாகப் போறன் என்று சொல்வது வெருட்டாக இருக்காது என்றே உளவளத் துணையாளர்கள் கருத்தாகும். 'சாகலாம் போல கிடக்கு' என்று ஒருவர் சொல்வது கவனிக்கப்பட வேண்டிய விடயம். நல்ல குடும்ப உறவுகள் இருக்கும் இடங்களில் இயற்கையாகவே இணக்கப்படுத்தலாக அமையும். இது கடுமையானால் மருந்து கொடுக்க வேண்டும்.

எல்லோருக்கும் மனவடு இருக்கின்றது. எமக்கு இருக்கின்றதா எனப் பார்க்க வேண்டும். இது களங்கமானது என்று யோசிப்பதைத் தவிர்க்க வேண்டும். வெளிநாட்டு கன விடயங்களை எடுத்து வைத்திருக்கின்றோம். ஆனால் அதில் உள்ள நல்ல விடயங்களை எடுக்கின்றோமில்லை. அவர்கள் ஆற்றுப்படுத்தலுக்குச் சாதாரணமாகப் போவார்கள் இங்கே களங்கமாகப் பார்க்கப்படுகின்றது.

உலகம் முழுதும் எடுத்துப் பார்த்தால் ஐந்தில் ஒருவருக்கு உளப்பிரச்சனைகள் காணப்படுகின்றது. ஆனால் சிகிச்சைக்குப் போனால் 10இல் 8ப்பேரைக் குணப்படுத்தலாம்.

**சிக்கலான மனவடு**

தான் ஆர் என்று மறந்து போகும் ஆளுமை மாறிவரும் வாழ்வின் அர்த்தம் மாறிவிடும். (உ+ம்) :சிவபெருமானைக் கும்பிட்டம் இப்ப அனுமானைக் கும்பிடுறம் எண்டால் எமது வாழ்வின் அர்த்தம் மாறிவிட்டது. சிவபெருமானைக் கும்பிடும் போது யுத்தம் நடந்தது. அதால வேண்டியது கிடைக்காதிருக்கலாம். இப்ப யுத்தம் இல்ல அதால அனுமானை கும்பிடும்போது வேண்டியது கிடைக்க லாம்.

**நல்லாரைக் காண்பது**

தாங்குதிறன் எமக்குள் இருக்க வேண்டும், இதற்கு நகைச்சுவை உணர்வு, ஆன்மீக உணர்வு, பொதுப்பணிகளில் ஈடுபாடுகள் தாங்குதிறனை அதிகரிக்கும். இன்றைய பத்திரிகைகள் தற்கொலை என்று போடாமல் அகால மரணம் என்று போடலாம் தற்கொலை என்று போடும்போது அது மற்றவரைத் தொற்றுகிறது. தொலைக்காட்சியில் சண்டைக் காட்சியைப் பார்க்கக் கூடாது. நல்லதையே பார்க்க வேண்டும். நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும் தீயது என்று கண்டால் அதைத் தவிர்க்க வேண்டும். நல்லது எமக்குள் தொற்ற வேண்டும் அப்போது தான் அது மற்றவரையும் பற்றும் தீயதை திருப்பத் திருப்ப சொல்வதைத் தவிர்த்து நல்ல விதமாகச் சொல்லலாம். முறித்துப் போடலாம் ஒட்டுவது கஸ்ரம், மரமும் அப்படித்தான் , மனமும் அப்படித் தான். எமது சமூகத்தைக் கைவிடக்கூடாது. வாழ்க்கை என்பது ஒரு பழக்கம் பழக்கத்தை மாற்ற முடியாது. எண்ணம், உணர்வு எல்லாம் பழக்கம் தான் கதைகளில் கஸ்ரமானது 'நாடகம்' அறிவியலில் 'உளவியல்' ஆனால் நாடகம் எண்டால் எல்லோரும் தெரியும் என்பார்கள். மனம் சம்பந்தப்பட்டால் உளவியல் தெரியும் என்கிறோம். உளவியல் மிகவும் கஸ்ரமான விஞ்ஞானம்.

**கேள்வி பதில் கலந்துரையாடல்**

நாளைய சமூகம் எனனை நினைக்க வேண்டும் என்றால் போறபாதை சரியாக இருக்க வேண்டும். சரியான நூல்களை வாசித்து அதன்படி நடக்க வேண்டும் 'ரோல்மொடலாக' நல்லவர்களை வைத்திருக்க் வேண்டும்.

முல்லைத்தீவில் வீட்டுக்கு வீடு ஆறுதல் தேவையாக உள்ளது, யார் போய்ச் செய்வது, இதை மாற்ற வேண்டும்! போர் நடந்த காலத்தில் தாக்கம் குறைவாக இருந்தது ஏனென்றால் உயிரைக் காப்பாற்ற யோசிச்சம். இப்ப நேரமிருக்குது செயற்திறன் உள்ளவர்களாக இருக்கும் போது மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

சரியான ஆய்வுகள் செய்வதற்கு முன்னைய காலத்தில் அனுமதி என்ற விடயம் இருக்கவில்லை. இன்று சந்தேகங்கள் இருக்கிறது, நிறைய இடங்களில் அனுமதி ஒரு வகையான விசவிட்டம்! பள்ளிக்கூடத்துக்குள்ளேயே பிரச்சனைகள் கிடக்கிறது வெளியாட்கள் உள்ளே போக முடியாது!

**ஓராள் சரியாகச் செய்தால் அதைப் பிழை என்று சொல்வது தான் தன்னை பெரியவராக்கும் அரசியல் இதால எல்லோருக்கும் மனம் களைச்சுப் போச்சு**

எங்கள் ஆசிரியர்களைப் போல நாங்கள் இல்லை. எங்களைப் போல இன்றைய மாணவர்களில்லை என்று பல கருத்துக்களை முன் வைத்தார் கோகிலா மகேந்திரன்.




## நற்பணி சாதனையாளர் விருது "2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளையோர் மற்றும் சமூகசேவை ஆர்வலர்களே!
உங்களை சாதனையாளர்களாக உருவாக்கி "வடக்கின் சாதனையாளர் நற்பணி விருது" "கிழக்கின் சாதனையாளர் விருது" என்ற பிரிவுகளில் 10,000 ரூபா பணப்பரிசும், நினைவுக்கேடயமும், சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கும் செயல்திட்டம்

**இந்தப் பலப்பரீட்சையில் பங்குபற்ற நீங்கள் தயாரா........**

**மேலதிக விபரங்களைப் பெற விண்ணப்பியுங்கள்**

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை.




அனுசரணையில சுன்னாகம கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிரின்டேர்ஸ் நிறுவனத்தில் 14.06.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது